சக்ரவர்த்தினி.

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை."

VOL. VII. தொகுதி எ. | MADRAS, NOVEMBER & DECEMBER 1911. சென்னை நவம்பர் ,, டிசம்பர் 1911. | NO. 4. 5. பகுதி ச. ரு.

நமது சக்ரவர்த்தியவர்களின் மகுடாபிஷேக வைபவம்.

ஆங்கில அரசாட்சி தொடங்கியகாலமுதல் நடந்தமகுடாபிஷேக வைபவங்களுள் இதுவே சிறந்தது. இதுவரையில் சக்ரவர்த்தியாக வந்தவர்கள் தமது மகுடாபிஷேகத்தை இங்கிலாந்திலேயே செய்து கொண்டு தங்கள் பிரதிநிதிகளைக்கொண்டு டெல்லியில் மறுபடி டர்பார் நடத்தி யிருக்கிறார்களே யல்லாது, நமது மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்களைப்போல் டில்லியில் நேராக வந்து நடத்தியதில்லை.

இந்துக்களுக்குப் பிரிடிஷ் அரசர் நேரில் வந்து மகுடாபிஷேகவைபவம்நடத்தவேண்டுமென்ற விருப்பம் 1858-ம் வருடம் விக்டோரியா மகாராணியார் இந்தியாவின் அரசாட்சி வகித்தகால முதலிருந்து வந்து, அதுநிறைவேற இப்பொழுதுதான்வேளைவந்தது. அதிலும் பரமதயாளுவாகிய மகாராஜா ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்கள் விஜயம்செய்யப்பாக்கியம்வாயத்தது மிகவும் கொண்டாடத்தக்கது. இதுவே நமது தேசம் நன்னிலைமையடையத்தக்க

குடிகளுள் ஒன்று என்றுசொல்லலாம். 6000மைல்தூரம்கடலைக் கடந்து வந்து தமது மகுடாபிஷேகவைபவத்தை இந்துக்களனை வரும் அளவிறந்த மனமகிழ்ச்சியோடு கொண்டாடக் கிருபை புரிந்த நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி யவர்களின் மேன்மையான குணத்திற்கு நாம் என்றும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டவர் களாவோம்.

டில்லிமா நகரச்சிறப்பு.

தருமபுத்திர மகாராஜான் தனது இராஜதானி நகரமாகக் கொண்டு அரசுபுரிந்து வந்த மகிமையுடையது டில்லி. அன்றியும் சுமார் 1000-வருடகாலமாக மகாராஜாக்களும் சக்ர வர்த்திகளுமிருந்து அரசுபுரிந்து வந்த பிரதான நகரம். நமது பூர்வீகர்களால் இந்த டில்லிமாநகரமானது மிகவும் மேன்மையா கப்பாராட்டப்பட்டது மன்றித் தருமராஜாக்கள் அநேகரிருந்து பலபல தான தருமங்களையும் யாகங்களையும் நடத்திய புண்ணிய பூமியாகும். அத்தகைய புண்ணியபூமியில் ஏனைய ஆங் கில அரசர்கள் அடையப்பெறாத மகுடாபிஷேக உற்சவம் நடை பெறும் பாக்கியம் வாய்க்கப்பெற்றது மிகவும் சிறப்புடைத்தா மன்றோ? நமது பூர்வீகர்களால், இந்தடில்லியில் நடக்கும் மகுடா பிஷேகமே எல்லாவற்றுள்ளும் மேன்மையாகக் கொண்டாடப் பட்டு வந்திருப்பதாகத் தெரிகிறது. அதை நோக்க, நமது மகா ராஜா ஜார்ஜ்சக்ரவர்த்தி யவர்களின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமா?

இந்த டில்லிமா நகரத்தின் மகிமையையறிந்தே நமது மகா ராஜா சக்ரவர்த்தியவர்கள் அதனைப் பிரதான நகரமாக்கினர் போலும்.!!

இனி நமது மகாராஜாவும் மகாராணியவர்களும் லண்டன் மாநகரத்தைவிட்டுப் புறப்பட்டதுமுதல் கவனிப்போம்.

சக்ரவர்த்தி புறப்படுவதற்கு முன்பே பிரிவிகௌன்ஸில் மீடிங்கொன்று கூட்டப்பட்டது. அப்போது மாகாராஜா அவர்களின் நிர்வாக அதிகாரத்தை வகிக்க ஓர் ஸ்பெஷல் கமிட்டி நியமிக்கப்பட்டது. மகாராஜா பக்கிங்காம் பாலேஸை விட்டுச் சென்ற நவம்பர் மாதம் 11ந்திகதி விக்டோரியா ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார். புறப்படும்போது வெகுசிறப்பாகவேயிருந்தது. அநேக ஜனங்கள் தெருக்களில் கூடிநின்றுவேடிக்கை பார்த்து வாழ்த்தினார்கள். இந்த வைபவத்துடன் போர்ட்ஸ்மௌத் தென்னும் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தார். அங்கு கடற்படையும் தரைப்படையும் சேர்ந்து சந்தோஷகரமாக வரவேற்றன. பின், சக்ரவர்த்தியவர்கள் தமது குடும்பத்தாருடன் மேடினவென்றும் கப்பலிற் பிரயாணமானார்.

மகாராஜாவும் மாகாராணியும் டெல்லி தர்பார் சமயத்தில் அணிந்துகொள்ளத்தக்க இரண்டு மகுடங்களும் ஒரு உத்தியோகஸ்தர் வசம் ஒப்புவிக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்டன. இதுவன்றி இன்னும் அநேகவிலையுயர்ந்த ஆடையாபரணங்களும் முத்தாரங்களும் வயிரங்களாற் செய்த தாமரை மலர்களும் கொண்டுவரப்பட்டன.

மேடினா என்னும் கப்பல் செங்கடல்மார்க்கமாகவந்து நவம்பர் மாதம் 16-ந் திகதி ஜிப்ரால்டரை யடைந்தது. அங்கே சக்ரவர்த்தியவர்களுக்கும் சக்ரவர்த்தினியவர்களுக்கும் அநேக வாழ்த்துப்பத்திரங்கள் வாசிக்கப் பட்டதுமன்றி அவர்கள் அதை விட்டுப் புறப்படும்போது 101-மரியாதை குண்டுகள் போடப்பட்டன.

இங்ஙனம் அங்கங்கு செய்யப்பட்ட வைபவங்களையும் வாழ்த்துகளையும் ஏற்றுக்கொண்டு டிசம்பர்மாதம் 2-ந் திகதி காலை $9\frac{1}{2}$-மணிக்குப் பம்பாய்த் துறைமுகம் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் வந்த மெடினு என்னும் கப்பலோடு நான்கு கப்பல் கள் வந்தன. அந்தத் துறைமுகத்திலிருந்த மற்றக் கப்பல்கள் மெடினுக் கப்பலை வரவேற்றன. அச்சமயம் 101 மரி யாதை குண்டுகள் போடப்பட்டன. அன்று $10\frac{1}{2}$-மணிக்கு ராஜப் பிரதிநிதியவர்கள் தமது பரிவாரசகிதமாய் மெடினு கப்ப லுக்குச் சென்று சக்ரவர்த்தியவர்களையும் சக்ரவர்த்தினியவர் களையும் வரவேற்றுப் பரமானந்த மடைந்தார். பிறகு பம்பாய்க் கவர்னர் ஸர் ஜார்ஜ் கிளர்க் அவர்கள்வர, அவர்களை ராஜப்பிரதி நிதி, சக்ரவர்த்தியவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

பிறகு பம்பாய்க் கவர்னரவர்களால் பம்பாய் சீப் ஜஸ்டிஸ், பாம்பாய் லார்ட்பிஷப், பம்பாய் கவர்ன்மென்ட் சீப் செக்ரடரி, பூனு டிவிஷன் ராணுவத்தலைவர் இந்நால்வரும் சக்ரவர்த்தியவர் களுக்கு அறிமுகம் செய்விக்கப்கப் பட்டார்கள். ராஜப்பிரதி நிதியார் சக்ரவர்த்தியவர்களுடன் கூடி ஒருங்கே மத்தியான விருந்துண்டார்.

பிற்பகல் நான்கு மணிக்குச் சக்ரவர்த்தி யவர்களும் சக்கிர வர்த்தினியவர்களும்மெடினுகப்பலைவிட்டுஇறங்கினார்கள்.உடனே 101-மரியாதைக் குண்டுகள் போடப்பட்டன. அவர்களோடு இதற்கென்றே அலங்கரிக்கப்பட்டிருந்த சிங்காரப் பந்தலுக்கு வந்து சேர்ந்தார்கள். சக்கிரவர்த்தியவர்களும் சக்கிரவர்த்தினி யவர்களும் அதியற்புதமாய் அலங்கரிக்கப்பட்டிருந்த ஆசனங் களில் வீற்றிருக்க, பம்பாய் கார்பொரேஷன் பிரசிடெண்டான ஸர். பி. மேடா அவர்கள் சக்கிரவர்த்தியவர்கட்கும் சக்ரவர்த் தினியவர்கட்குமாக வரவேற்புப் பத்திரம் வாசித்தனர்.

வரவேற்புப் பத்திரமானது மிகவும் நன்றாய் வாசிக்கப் பட்டது. அது கேட்டு மகிழ்வுற்ற சக்ரவர்த்தியவர்கள் தம்மைச் சாமான்னியர்போலவே பாராட்டிக்கொண்டு தமது உற்ற நண் பர்களிடம் பேசுவதுபோல் தமது தயாளத்துவம் பரிபூரணமாய் விளங்கப் பதில் உத்தரம் அளித்தனர்.

சக்ரவர்த்தி யவர்களின் பேச்சு.

"உங்களுடைய மத்தியில் என்னை யன்னியனல்ல வென்று கூறுகிறீர்கள். நீங்கள் கூறியது சரியே. உங்களுடைய அழகான பட்டணத்திற்கு நான் முதல்தடவை வந்தவனல்ல வென்பதை நான் மனப்பூர்வமாகக் கூறுகிறேன். நான் இங்கே ஆறுவருடத்திற்கு முன்பே வந்திருக்கிறேன். அச்சமயம் நீங்கள் அன்பும் ஆதரவும் பாராட்டி வரவேற்றது என் மனதிலிருக்கிறது. நான் உங்களுடைய கடற்கரையை கிட்டும்போது கண்ட அதியற்புதமான காட்சியும் கடலின் நடுவிலிருந் தெழுவது போலெழும் தென்னை பனை முதலிய சோலைகளின் தோற்றமும் என்னைமறக்க வொட்டாமல் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டிருக்கின்றன முன் 1905-ம் வருஷம் இத்தேயத்தின் சிலபாகங்களைச் சுற்றிப் பார்க்கவும் அவைகளைப்பற்றி யறியவும் எனக்குத் தைரியந்தந்தது அச்சமயம் நீங்கள் எனக்குப் படித்த அன்பான வரவேற்புப் பத்திரமேயாகும். அப்போது நான் பெற்ற அறிவானது எல்லாச் சாதி சமயங்களிடத்தும் என்னுடைய அன்பை விருத்தி செய்யாமலிருக்கவில்லை. என தன்புள்ள தந்தையின் துக்ககரமான மரணத்தால் எனது முன்னோர்களின் சிம்மாசனத்தை நான் வகிக்க நேர்ந்தபோது, என்னுடைய உத்தமமான பிரஜைகளை மீண்டும் பார்க்கவேண்டுமென்கிற உண்மையான அவா முதலி லுண்டாயது. (கரகோஷஞ் செய்தனர்)

அந்த அவா நிறைவேறும்படி, சக்ரவர்த்தினியார் என் பக்கத்திருக்க, நான் உங்களனைவருக்கும்நடுவிலிருப்பதெனக்குப் பரமானந்தத்தை யுண்டு பண்ணுகிறது.

மழையின்மையினால் இந்த ராஜதானியின் சிலபாகங்கள் வருந்துமென்று கொண்டிருந்த பயம் நீங்கத் தற்செயலாய் மழை பெய்த இச்சமயம் நான் இங்கு வந்ததற்கு மனமகிழலானேன்.

"பம்பாய் நகரமானது ஆதியில் ஒரு பிரிட்டிஷ் அரசிக்கு ஸ்ரீதனமாய்க் கிடைத்ததென்று எங்கள் சாலகமான பத்திரம் ஞாபகப்படுத்துகின்றது. ஹம்பரீகூக் 250 வருஷத்துக்கு முன்னுல் ஒரு கரையார்குப்பமாக இருந்து மேற்கண்டபடி ஸ்ரீதனமாகக் கிடைத்த இதை ஏற்றூர். உங்களுக்கு முன் வந்தவர்களும் நீங்களும் அதை பிரிட்டிஷ் மகுடத்தில் ஆபரணமாகும்படி செய்தீர்கள். அதனுடைய அழகான உயர்ந்த கட்டடங்களை மீண்டும் பார்த்து மகிழ்ந்தேன். அவ்வளவுநன்ருய்த் தோன்ருமல் அதிக நன்மை செய்வனவாகிய புதுமைகளையும் நான் குறிப்பிடுகிறேன். இவ்வளவுக்கெல்லாம் மேலாக இந்நகரத்து ஜனங்களின் அமைதியும் சுகமும் வளப்பமும் இந்த நகரத்தைப்போன்ற ஆபரணத்தின் ஜோதியாய்இருக்கவேண்டி யிருக்கஅதைவிருத்தி பண்ண நீங்கள் செய்திருக்கும் முயற்சிகளை யறிந்து கர்வப்படுகிறேன்.

இன்று மகாராணி சக்ரவர்த்தினிக்கும் எனக்கும் நீங்கள் ஒருமனதுடன் செய்த வரவேற்புக்காக உங்களிடம் நன்றி பாருட்டுகிறேன்"—

பட்டணப் பிரவேசம்

பிறகு ஊர்வலம் நடந்தது. சக்கிரவர்த்தியும் சக்கிரவர்த்தினியும் முதல் வண்டியிற் சென்ருர்கள். இராஜப்பிரதிநிதியும் இந்தியா மந்திரியும் இரண்டாவது வண்டியிற் சென்ருர்கள். பம்பாய் கவர்னரும் அவரது பத்தினியாரும் மூன்ருவது வண்டியிற்சென்ருர்கள். மற்றும் சில பிரமுகர்கள் ஐந்து வண்டிகளிலேறிப்பின் தொடர்ந்து போனர்கள். இம்மகா வைபவத்தை ஜனங்கள் ஆரவாரத்துடன் கண்டுகளித்து வணக்கத்துடன் வரவேற்ருர்கள். சக்கிரவர்த்தியும் சக்ரவர்த்தினியாரும் அவர்

களின் வந்தன மரியாதைகளை சிரந்தாழ்ந்து அங்கீகரித்தவாறே சென்றனர். ராஜதம்பதி மறுபடியும் மெடினுக் கப்பலுக்குச் சென்றனர். இராஜப்பிரதிநிதி கவர்ன்மெண்ட் ஹவுஸுக்குத் திரும்பினர். அன்றிரவு பம்பாய் நகரமுழுமையும் தீபாலங்காரம் செய்யப்பெற்று ஜகஜ்ஜோதியாக ஜொலித்தது. துறைமுகத்திலிருந்த கப்பல்களிலும் தீபாலங்காரம் செய்யப்பட்டு பம்பாய் நகரம் என்றும் பாராத புதிபபட்டணம் போறகாணப் பட்டது.

இராஜ தம்பதிகளுக்கு மெடினுக்கப்பலில் இரண்டு மூன்று விருந்துகள் நடந்தன. டிசம்பர் 3ந்திகதி ராஜதம்பதி கப்பலை விட்டிறங்கி பம்பாய் கவர்ன்மெண்டு அவுஸ் சென்று ஸர்ஜார்ஜ் கிளார்க்கையும் லேடிகிளார்க்கையும பார்த்து, மாலையில் கதீட்ரல் சர்ச்சுக்குவந்து பார்த்துப் போனார்கள். பிறகு 4ந் திகதி மெடினுக்கப்பலிலிருந்து இறங்கி ஊர்வலமாகப் பொருட்காட்சி சாலை சென்றனர். அங்கே ராஜதம்பதியை பம்பாய் கவர்னர், ஷெரிப்பு, பம்பாய் சீப்ஜஸ்டீஸ், முதலியவர்கள் வரவேறறனர். முப்பதினுயிரம் மாணவர்கள் கூடிநின்று அவரவர் பாஷைகளில் பாடி இராஜதம்பதியை வாழ்த்தினர்கள். பிறகு அங்கிருந்து மெடினுக்கப்பலுக்குச் சென்றார்கள்.

பின் 5ந்தேதி செவ்வாயன்று மெடினுகப்பலை விட்டு இரவு 10–மணிக்கு போஜனத்துக்குமேல் இந்தியா மந்திரியோடும வேறு சிலரோடும் புறப்பட்டு 10-12–மணிக்கு அப்பாலோபந்தர்முகத்தில் வந்திறங்கினர். இராஜதம்பதி பந்தரையடைந்ததும் 101–மரியாதை குண்டுகள் போடப்பட்டன. அங்கிருந்து விக்டோரியா டர்மினஸ் ஸ்டேஷனுக்கு ராஜதம்பதி ஊர்வலமாய்ச் சென்றார்கள்.

டில்லிக்குப் புறப்படல்.

ஊர்வலமாகஸ்டேஷன்வந்து சேர்ந்ததும், ராஜதம்பதியைப் பம்பாய்க் கவனர்னர், சீப் ஜஸ்டீஸ், பிஷப்பு, கவர்னரின் நிர்

வாகச் சபைமெம்பர்கள், முதலிய இன்னும் அநேக பிரமுகர்கள் எதிர்கொண்டு சென்று வரவேற்று அவர்களையும் அவர்களுடைய பரிவார ஜனங்களையும் ஏற்றிச்செல்லச் சித்தமான ஸ்பெஷல் வண்டி நின்றுகொண்டிருந்த ராயல் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். அந்த ஸ்பெஷல் வண்டியில் ராஜதம்பதி பரிவாரங்களோடு முறைப்படி ஏறிக்கொண்டார்கள். ஜயகோஷத்தோடும் வாத்திய கோஷத்தோடும் வண்டி 10—45-க்கு அங்கிருந்து புறப்பட்டது.

டில்லி மாநகரச் சிறப்பு.

டிசம்பர்மாதம் 6-ந்திகதி வந்தது. டில்லிமாநகரமானது பூர்வம் தருமபுத்திர மகாராஜன் ஆட்சி புரிந்தபோது தான் அடைந்திருந்த மேன்மையை மீண்டும் அடைந்ததென்று எவரும் அதிசயிக்கத்தக்கபடி அலங்கரிக்கப் பட்டிருக்கிறது. எங்கு கண்டாலும் அவரவர் அந்தஸ்துக்குத் தக்கபடி பல பலவிதமான கூடாரங்களை வரிசைக் கிரமமாகப் போஜனவசதிகளுக்கும் வசித்தற்கும் கலந்து பேசுவதற்கும் ஏற்றபடி தனித்தனியே அமைக்கப்பட்டிருக்கின்றன.

விருந்தாளி ஒவ்வொருவருக்கும், கூடவந்த இருவருக்கும், காப்பிக்கும், பருகுவதற்கும் வேண்டிய அளவு பால், சர்க்கரை, அரிசி, பருப்பு, புளி, இலை, வெற்றிலை பாக்கு, சோடா, லெமனெட் பாட்டல்கள்; விதம் விதமான பழவர்க்கங்கள், காய்கறிகள், நெய், பால், தயிர் முதலியவைகளும் சப்ளை செய்து வருவதும் தவிர, வெளியேபோய் வருவதற்கு மோட்டார்வண்டிகள், குதிரைவண்டிகள், வாகனங்கள் முதலிய சகல செளகரியங்களும் சரிவர நடந்தேறி வரும்படியாய் கவனிக்கப்பட்டு வருகின்றன.

ராஜ தம்பதியின் வரவை எதிர்நோக்கி கூடாரங்கள் எல்லாவற்றிலும் ஒன்றுவிடாமல் ஜனங்கள் வந்து கூடிவிட்டார்கள். எந்த கூடாரங்களைப் பார்த்தாலும் முன் பக்கம் பல பல பூச்செடிகள் வைக்கப்பட்டும் கொடிகள் நாட்டப்பட்டும் கண்ணைக்

கவரத்தக்க அலங்காரத்தோடு விளங்குகின்றன. ரோட்டுகளி லெல்லாம் அதியற்புதமான அலங்கார வளைவுகளும் பதாகை களும் விளக்குகளும் தோரணங்களும் வரிசைக்கிரமமாக அமைக் கப்பட்டிருக்கின்றன. இராஜதம்பதியை வரவேற்கும்போது இன்னவிதமாக விருக்கவேண்டுமெனப் பழக்கப்பட்ட துருப்பு கள் அங்கங்கு அணிவகுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன.

இவ்வளவரந்தம் வைபவத்துடனிருக்கும் டில்லிமாநகரை எவர்தான் வந்துபார்த்து மகிழ மனங்கொள்ளார்! தேவர் களும் அந்தரத்திலிருந்து பார்த்திருக்கலாம் அவர்கள் இருப் பது சொர்க்கலோகமேயாயினும் இந்த வைபக்கோலம் காண் பது அவர்களுக்கு அரிதாமன்றோ? 6-ந்தேதி புதன்கிழமை யன்று இரவுமுழுதும் இராஜதம்பதியைக் காணவேண்டுமென் கிற அவாவினலும் நாளை ராஜா வருவாரென்கிற ஆநந்தத்தா லும் நித்திரை புரியாமலேயிருந்து விட்டார்கள் சிலர்; சிலவெகு நேரம் விழித்திருந்து "சூரியன் உதயமானபின்பல்லவா நாம் இராஜதம்பதியைக் காணப்போகிறோம்; ஆகையால் அவன் வர வைப் பிரார்த்திப்போம்"என்றெண்ணித் தியானிப்பதுபோல் நித் திரைபோய்விட்டார்கள். இன்னும்சிலர்நாம்எவ்வளவுவருந்தியும் துதித்தும் சூரியன் வருகிறனில்லை யென்று அவனைவெறுத்தும் பேசிக்கொண்டே விழித்துக்கொண்டிருந்தார்கள். வேறு சிலர் கொட்டு முழக்குக் குதூகலத்துடன் சந்தோஷங் கொண்டாடி விடி விடிய ஆடிப்பாடினார்கள்.

இப்படியிருக்கையில் சூரியனும் குணதிசையில் தன் முழுக் கிரணங்களுடன் எழுந்து தான் இராஜதம்பதியைப் பார்க்கவந் ததைப் பகிரங்கமாகக்காட்டினன். அப்பொழுது எல்லாருடைய முகமாகிய தாமரை மலர்களும் மலர்ந்தன.

டெல்லியிலுள்ள ஸேலிங்கார் ஸ்டேஷனை அநேக துருப்புகளாலும் பதாகைகளாலும் தோரணங்களாலும் அலங்

கரிக்கப்பட்டிருக்கின்றன. ராஜப்பிரதிநிதியும் லேடி ஹார்டிஞ்சும், அநேக சிவில் உத்தியோகஸ்தர்களும் முன்னமே சென்று காத்திருக்கின்றனர். ஒவ்வொருவருடைய மனதிலும் நிமிஷத்திற்கு நிமிஷம் சக்ரவர்த்தியைக் காணவேண்டுமென்னும் அவா தோன்றிக்கொண்டேயிருக்கிறது.

இராஜ தம்பதியின் வருகை.

இப்படி யிருக்கையில் குறித்த நேரத்தில் ராஜதம்பதியினுடைய ஸ்பெஷல் வண்டி ஸெலிம்கார்ஸ்டேஷனில் வந்து மெதுவாக நின்றது. சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் பீல்ட்மார்ஷல் உடுப்புடன் வண்டியைவிட்டு இறங்கினார்கள். உடனே எல்லாரும் சென்று வரவேற்றார்கள். அக்கணமே ராஜகீதமும் 101 மரியாதைகுண்டுகளும் தொனித்தன. இராஜதம்பதி அங்கிருந்து வரவேற்புக் கூடாரத்துக்குக் கால்நடையாகவே சென்றனர் அங்கே ஏற்கனவே கூடியிருந்த தேசமன்னர்கள் நிஜாம்முதலாக முறையே ராஜ தம்பதிக்கு அறிமுகம் செய்விக்கப் பட்டார்கள்.

பிறகு அங்கிருந்து சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் அநேக மேளவாத்தியங்களுடனும் இராணுவ சிபாய்கள், குதிரைப்படை, முதலியவைகளுடனும் அநேக இராஜாக்களுடனும் தம்மைச் சேர்ந்த பரிவாரங்களுடனும் பவனிசென்று ரிட்ஜ் என்னுமிடத்தில் அமைக்கப் பட்டிருந்த வரவேற்பு மண்டபத்தை யடைந்தார்கள். அங்கே ஒரு உபசரணைப் பத்திரம் வைஸ்பிரஸிடெண்டாகிய ஆனரபில் மிஸ்டர் ஜன்கின் ஸால் சமர்ப்பிக்கப்பட்டது.

விஞ்ஞாபனப் பத்திரம்.

வைத்துக் கொடுக்கப்பட்ட தட்டு.

பிரிடிஸ் இந்திய மகாஜனங்களின் விஞ்ஞாபனப் பத்திரி

கையை ஆனரெபில் மிஸ்டர் செங்கின்ஸ் ஒரு நேர்த்தியான தட்டில் வைத்து ஸமர்ப்பித்தார். அத்தட்டு கோழிமுட்டை வடிவாய் வெள்ளியால் செய்யப்பட்டிருந்ததுமன்றி அதன்மேல் வைத்த விரல் சருகிப்போம்படியாய் அவ்வளவு வழுவழுப்பாக மெழுகிடப்பட்டுமிருந்தது. அதனில் அடியிற் கண்டபடி எழுத்துக்களும் வெட்டப்பட்டிருந்தன.

"பிரிட்டிஷ் இந்திய மகாஜனங்களின் பேரால் 1911-ம் வருஷம் டிசம்பர்மீ 7-ந் தேதி மாட்சிமை பொருந்திய சக்ரவர்த்தி தம்பதிகள் டில்லிமா நகரின் கண் பிரவேசித்த சமயம் கவர்னர் ஜெனரல் சட்டசபை மெம்பர்களால் ஒரு விஞ்ஞாபனப் பத்திரிகையோடும் வழங்கப்பட்டது"

அந்த உபசரணைப் பத்திரத்திற்கு மகாராஜா சக்ரவர்த்தியவர்கள் அளித்த பிரதி உத்தரமாவன:—

மகாராஜா சக்ரவர்த்தியவர்கள் டில்லியில் பேசியது.

"மகாராணி சக்ரவர்த்தினியாருக்கும் எனக்கும் நீங்கள் இன்று உதாரத்தோடும் உள்ளன்போடும் செய்தவரவேற்புக்காக உங்களுக்கு நான் மனப்பூர்வகமாக வந்தனமளிக்கின்றேன்.

நம்முடைய இந்திய ஏகாதிபத்தியத்திற்கு நல்வாழ்வும், அதன் ஜனங்கட்கு எக்காலமும் அமைதியும் சுகவாழ்வும் அருளல் வேண்டுமென்று நாம் கடவுளை மனப்பூர்வகமாகப் பிரார்த்திக்கின்றோம்.

மகாராணி சக்ரவர்த்தினியாருக்காகவும், எனக்காகவும் ராஜவிசுவாசமும் வணக்கமு மமைந்து எங்கள் மனத்தைக் கொள்ளைகொண்டு போகக்கூடிய வார்த்தைகளடங்கிய துமா

யுள்ள உங்களுடைய அட்ரசிற்கு நான் மனப்பூர்த்தியாக வந்தனமளிக்கின்றேன். இவை, நாங்கள் இங்கிலாந்தில மகுடாபிஷேகஞ் செய்து கொண்டபோது என்னுடைய ராஜ்யங்களின் எல்லாப் பாகங்களினின்றும் பக்திபூர்வகமாக அன்புச்செய்திகள் வந்தன போலவேஇந்தியாவினின்றும் கணக்கிறந்தனவான அன்புச் செய்திகள் வந்தன; அவையும் உங்களுடைய தேசத்தில் இப்போது நாங்கள் வந்ததுமுதல் எலலாச் சாதிசமயத்தவரான இந்தியப் பிரஜைகள் பாராட்டும் பக்திபூர்வகமான விசுவாசமும் ஞாபகமூட்டுகின்றன.

பிரிட்டிஷ் இந்தியாவில் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளடங்கிய சட்டசபையில் அவர்கள் காட்டும் விவேகம் நிறைந்த அநுபோகத்தால் எனது கவர்னர் ஜனரல் எவ்வளவு உதவியும்ஆதரவுமடைகின்றாரென்பதை அவரால் நான் அறிகிறேன். இந்திய ஜனங்களுக்காக நீங்கள் எங்களுக்குச் செய்யும் உபசாரத்தை நான் மிகுதியும் மதிக்கின்றேன். இந்திய ஏகாதிபத்தியம் அமைதியாயும், சுபக்ஷேமமாயும், திருப்தியாயும் மேன்மேலோங்க வேண்டுமென்று நீங்கள் உங்களுடைய அட்ரசிற் குறிப்பித்தவாறு அவை மேன்மேலோங்குவதைப் பார்க்கிலும் எங்களிருதயத்திற்கு பிரியமானது வேறொன்று மின்றென்று நான் கூறுவதை யுறுதியாக நம்புங்கள்".

இங்ஙனம் நமது சக்ரவர்த்தியார் கூறிய பதிலானது எல்லாருக்கும் அளவிறந்த சந்தோஷத்தை யளித்ததென்பதைப் பற்றிக் கூறவும்வேண்டுமா? அங்கிருந்தயாவரும் புளகாங்கிதர்களாகிக் கரகோஷஞ்செய்து கடவுள் நமது சக்ரவர்த்தியைக் காப்பாற்றுவாராகவென்று வாழ்த்தினார்கள்.

டிசம்பர் 8, 9, திகதிகளில் அநேக ஆடல்பாடல்களும் விருந்துகளும் போலோ ஆட்டமும் புட்பால் ஆட்டமும் வெகு கோலாகலமாயும் உற்சாகமாயும் கொண்டாடப்பட்டன. 10-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையை சக்கரவர்த்தியும் மகாராணியும்

வழக்கப்படி ஓய்வு நாளாகக் கொண்டார்கள். 11-ந்திகதி திங்க ளன்றும் பல பல விசேஷங்கள் நடந்தன. 12-ந்திகதி மங்கள வாரத்தன்று காலை 11-மணிக்குள்ளாக சக்ரவர்த்தியவர்களின் ராஜகிருகத்தைச் சேர்ந்த மெம்பர்களும் இராஜப் பிரதிநிதியும் தமது பரிவாரத்தோடும் பத்தினியோடும் கொலுமண்டபத்திற்கு வந்துசேர்ந்தார்கள். மரியாதைக்குண்டுகள் அநேகமாகப்போடப் பட்டன. பின், $11\frac{1}{2}$-மணிக்கு மாக்ஷிமைதங்கிய சக்கரவர்த்தி யும் சக்ரவர்த்தினியும் தங்கள் இரதத்தைவிட்டுப் புறப்பட்டுக் கொலுமண்டபம் போனார்கள். கொலுமண்டப வாசலில்ராஜப் பிரதிநிதியவர்கள் இராஜதம்பதியை எதிர்கொண்டு வரவேற்றார். அவர்கள் கொலுமண்டபத்துள் நுழையும்போது 101-குண்டு கள் போடப்பட்டன. வாத்திய கோஷங்களும் இராஜகீதங்களும் முழங்கின.

இந்த வைபகத்துடன் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியாரும் தங்கள் தங்கள் ஆசனங்களில் அமர்ந்தார்கள். உடனே சமு கத்திலிருந்து தர்பார் ஆரம்பிக்க உத்தரவுண்டாயிற்று. அக் கணமே வாத்தியகோஷங்கள் ஆகாயமளவும் பாவும்படி முழங் கின. அப்பொழுது சக்ரவர்த்தியவர்கள் எழுந்து அன்போடு ஓர் பிரசங்கம் புரிந்தனர். பிறகு அதன் முடிவில் இராஜப்பிரதி நிதியவர்களும் மற்று முள்ள உயர்பதவி உத்தியோகஸ்தர்களும் தேச மன்னர்களும் எழுந்து நின்று வணங்கினார்கள். பிறகு இராஜதம்பதி ராயல் பாவிலியனுக்குப் பவனியாகச் சென்றது கண்கொளாக் காட்சியாக விருந்தது.

இவ்விதமான வைபவங்களுடன் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தி யவர்களின் மகுடாபிஷேகம் நடைபெற்றது. இப்பொழுதும் 101-மரியாதை குண்டுகளும் போடப்பட்டன. இந்த மகுடாபி ஷேகவைபவமானது டில்லியொன்றிலுமட்டு மென்றில்லாமல் இந் தியாவில் எப்பாகங்களிலும் நகரமுதலாக சிறிய கிராமங்களிலும் என்று மடையாத மகிழ்ச்சியுடனும் ஆரவாரத்துடனும்

நிறைவேற்றப்பட்டது. அச்சமயங்களில் இராமாயணத்தில் இராமபிரானது பட்டாபிஷேகமும் பரதபாதுகா பட்டாபிஷேகமும் படித்து அநேக இடங்களில் பிரசங்கம் செய்யப்பட்டன. தேவாலயங்களிலும் பூசை நைவேத்தியங்கள் வெகு சிறப்பாகநடத்தப்பட்டன. ஏழைகளுக்கு நமது இராஜதம்பதியின் வாழ்வை யுத்தேசித்து அன்னமளிக்கப்பட்டன.

இவ்வள வனந்தம் வைபவங்களுடன் எவருக்கும்மகுடாபிஷேகம் இது வரையில் நடந்ததேயில்லை என்று சொல்லலாம். நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்களுக்கும் சக்ரவர்த்தினியாருக்கும் கடவுள் நீடித்த ஆயுளைத் தந்து தமது பிரஜைகளை அவர்கள் தமதுயிர்போல பாவித்து அரசுபுரிந்துவருமாறு எங்கும்நிறைந்த இறைவன் திருவருள் புரிவாராக.

சக்ரவர்த்தியளித்த நன்கொடைகள்.

பொதுஜனக் கல்விக்காக 50லட்சம் ரூபாய் கொடுத்ததும், அதற்கு மேன்மேலும் வேண்டும் பொருளுதவுவதாகக் கூறியதும் எல்லாக் கொடையிலும் சிறந்த கொடையாம்.

லார்ட்கர்ஸன் தங்காலத்தில் வங்காளிகளின் வார்த்தையை யொரு சிறிது மதியாது செய்த வங்காளப் பிரிவினையை வங்காளிகளின் பிரீதிக்கேற்ப மாற்றியது மகாராஜா சக்ரவர்த்தியவர்கள் இந்தியாவை இந்துக்களுக்குத் திருப்தியாக ஆட்சிசெய்வோமென்று கூறியதற் கிணக்கமாகவே யிருக்கின்றது.

50 ரூபாப் பரியந்தம் கீழ்க்கீழுத்தியோகங்களி லிருக்கும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கட் கெல்லாம் அரைமாதச் சம்பளம் வெகுமதி கொடுப்பதாகவுத்தரவளித் திருப்பது முன்னர் நடைபெற்ற தர்பார் காலத்தில் மேற்படி உத்தியோகஸ்தர் கட்

குக் கொடுத்த ஒருவாரச் சம்பளத்தினும் மேன்மையுடையதாகவே கருதப்படும்.

இந்தியராணுவ வீரர்கட்குயர்தரப் பதவிகளும் பட்டங்களும் அளிப்பதாகக் கூறியது இந்திய ராணுவவீரர்கள் மனப்பூர்வமாக வுழைத்துவரும் உழைப்பை யங்கீகரித்ததேயாம்

மகாமகோபாத்தியாயர் முதலிய பட்டம் பெற்றிருப்பவர்கட்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதாகக் கூறியது நமது சுதேச பாஷாபிவிருத்தியை விரும்பியதாகவே யிருக்கின்றது.

சொற்பக் குற்றவாளிகளையும் அற்பக் கடன்காரர்களையும் ஜெயிலினின்றும் விடுதலை செய்ததும் மேம்பாடுடையதே யாம். மேற்குறிப்பித்துள்ள சன்மானங்களேயன்றி வேறுபல சன்மானங்களுஞ் செய்தனர். பரோபகாரிகட்கும் விற்பன்னர்கட்கும் பட்டங்கள் பல அளித்திருக்கின்றனர்.

மகாராஜா சக்ரவர்த்தியார் அவர்கள் டில்லி தர்பாரில் பேசிய பேச்சு.

"இவ்விடத்திலின்று நான் உங்களுடைய மத்தியில் மனப்பூர்வகமாக நன்றி யறிதலோடும் திருப்தியோடும்இருக்கின்றேன். இவ்வருட மெல்லாம் மகாராணியாருக்கும் எனக்கும்அபூர்வமான அநேக பெருஞ்சடங்குகளும் அதிக வுழைப்பு மிருந்தபோதிலும் அவை சந்தோஷகரமாகவே யிருந்தன. முன்னர் நாங்களிந்தியாவிற்கு வந்தபோது அதனை நேசிக்கமுயன்றோம்; (அப்போது நீங்கள் செய்த) உபசாரஸ்மிருதி, நன்றியறிதல் வாயிலாகத் தூண்ட, காலத்தையும் தூரத்தையுங் கருதாது மீண்டு மிந்தத் தேசத்தைப் பார்க்கவேண்டு மென்னுமஊக்கமுண்டாக்கிற்று;எங்கள் சொந்த தேசத்திற் காட்டப்படும் அன்புபோன்று இங்கும் முன்னர் எங்கட்கு அன்பு காட்டப்பட்டதால், இத்தேசத்தைச் சொந்த தேசமாகக் கருதி, இதனை மீண்டும் பார்க்க மேலான நோக்கங்களுடன் நீண்ட யாத்திரை செய்யப் புறப்பட்டோம். அங்ஙனஞ் செய்தது, சென்ற ஜூன்மீ 22ந் தேதியில் வெஸ்ட்வமினிஸ்டர் ஆபியில் கடவுள் கிருமையால் என் முன்னோர்கள் தரித்திருந்த கிரீடத்தைப் பக்திபூர்வகமாக பண்டைக் காலத்துச் சடங்குகளை யனுசரித்துத் தரிக்க, நான் செய்துகொண்ட மகுடாபிஷேகத்தை யுங்களுக்கு நான் நேரில்வந்து அறிவிப்பேனென்று சென்ற ஜூலைமீ விளம்பரஞ் செய்திருந்த பிரகாரம் நடத்திக் காட்டுவதற்கேயாம். அதற்கிணக்கமாகவே, இப்போது

நடத்திக்காட்டினேன். மகாராணி சக்ரவர்த்தினியாருடன் நா னிங்கு வந்திருப்பது இராஜபக்தியுள்ள மன்னர்கட்கும், விசுவாச முள்ள பிரஜைகட்கும் எங்களுடைய அன்பைக் காட்டுவதற்கும், இந்திய ஏகாதிபத்தியத்தின் க்ஷேமமும், பாக்கியமும், எங்களிரு தயத்திற்கு எவ்வளவு பிரியமா மென்பதையுங் காட்டுவதற்கு மேயாம். மேலும், (லண்டன்மாநகரில நடைபெற்ற) மகுடாபி ஷேக வைபவத்தைக் காணும் பாக்கியம் பெறுதவர்கள் ஷ மகு டாபிஷேகக் கொண்டாட்டத்தை டில்லியில் காணுமாறு செய்விக் கப் பிரியங் கொண்டுள்ளேன்''

''என்னுடைய கவர்னர்களும் நம்பிக்கையுள்ள உத்தியோகஸ் தர்களும், மாட்சிமை பெற்ற மன்னர்களும், ஜனங்களின் பிரதி நிதிகளும் இந்திய ராணுவவீரர்களின் டெபுடேஷன்களும் நிரம்பி யுள்ள பெருங் கூட்டத்தைப் பார்க்க எனக்கும் சக்ரவர்த்தினி யாருக்கும் மனப்பூர்வமான சந்தோஷமும் திருப்தியு முண்டா கின்றன. அவர்கள் எனக்கு விசுவாசத்துடன் செய்ய விரும்பும் ராஜ பத்தியையும் வணக்கத்தையும், மனப்பூர்வகமான திருப்தி யுடன் நான் நேரே பெறுவேன். தேசசரித்திரத்தில் நிலைபெறக் கூடிய விச்சம்பவத்தில் ராஜாக்களும் ஜனங்களும் அனுதாபமும் அன்பார்ந்த நல்லுணர்ச்சியும் பூண்டு என்னுடனென்று சேர்ந் திருக்கின்றனரென்னும் எண்ணம் என் மனத்தை விகசிக்கச் செய்கின்றது. இவ்வெண்ணங்கட் கறிகுறியாக என்னுடைய விசேஷ தயையையும் மதிப்பையும் பிரசித்தப் படுத்தும் செயல் களால் என் மகுடாபிஷேகக் கொண்டாட்டஞாபகத்திலிருக்கு மாறு செய்விக்க விருப்புள்ளேன்., அவற்றை யின்னுஞ் சில நேரத்திற்குள் என் வைசியராய் மூலமாக இச்சபைக்குத் தெரிவிப் பேன். முடிவாக, பூஜ்யர்களான என்னுடைய முதாதைகள் உங் களுடைய உரிமைகளையும் சுதந்தரங்களையும் காப்பாற்றுவதாகச் செய்துள்ள வுறுதிமொழிகளை புதுப்பிக்கவும், உங்களுடைய க்ஷேமம் அமைதி, திருப்திஎன்பனவற்றைப் பற்றி நான் கவலை யுள்ளவனுகின்றேனெ பதைப் பற்றியும் தெரிவிக்க விச்சமயம் வாய்த்ததென்று சந்தோஷப் படுகிறேன். என்னுடைய பிரஜை களின் மீது கடவுளுடைய அருளிருந்து காப்பதோடு நான் அவர் களுடைய சுகக்ஷேமங்களை விர்த்திசெய்யும் முயற்சியில் உதவி புரிவாராக.''

''இங்கிருக்கும் ராஜாக்களி யாவருக்கும் பிரஜைகளுக்கும் எங்களுடைய அன்பார்ந்த வாழ்த்துக்களைச்சமர்ப்பிக்கின்றோம்''

மஹாராஜாக்களிடத்தில் நடந்து கொள்ளவேண்டியமரியாதைநியமங்கள்.

ஸ்ரீ மஹாபாரதத்திலிருந்து எடுக்கப்பட்டது.

குலகுரு ஸ்ரீ தௌம்யாசார்யர் யுதிஷ்டரர் முதலாய பாண்டவர்களுக்கு உபதேசித்தது.

மஹாராஜாவை, சக்ரவர்த்தி, ஸம்ராட், விராட், ராஜாதிராஜன் மன்னர் மன்னன் என்று சொல்வதெல்லாம் அவரது விசேஷமான மஹிமை பற்றியே. திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனேன்னும் பெரியோர் வாக்கிற்கிணங்க, நாவிஷ்ணுப்பிருதிவீபதி: என்னும்வேதவாக்கியம்முழங்குகின்றது. தெய்வாம்சமான நரபதி தம் ப்ரஜைகளால் மிகுதியும் பூஜிக்கத் தக்கவரே யாவார்.

மன்னர் மன்னனிடத்தில் ஸேவகாவிர்த்தி செய்யும் மந்திரியோ, ப்ரத்யரோ, உத்தியோகஸ்தரோ எவராயினும்அவரிடத்தில் வெகு ஜாகரூகர்களாய் இருத்தல் அவசியமானதே. ராஜாவும், ப்ராமணனும், அக்கியும் ஸரிஸமமான போக்யதையோடு கூடியிருப்பவர். ராஜாவுக்கு நெருக்கமான பழக்கமுள்ளவனாயினும் அவரிடத்தில் அதிகப் பேச்சும், அவ்யாகிருதமான காரியங்களையும் வைத்துக்கொள்வது ஸரியல்லவென்பது திண்ணம். அக்கிஹோத்ராக்கிதானே, நாம் வளர்க்கும் அக்கிதானே என்று அதனை மடியில் வைத்துக்கொள்ளவோ, வேறெவ்விதமாக நினைத்துக் காரியங்களைச் செய்யவோ கூடாது. ஸமயம் போல் அதனருகே யிருந்தும் இராமலும் நம் காரியங்களை நடத்திக்கொள்ள வேண்டும். கெட்ட விஷத்தையுடைய பாம்பு

போன்ற துஷ்டர்களுடைய தீப்பழக்கங்களைக் கைக்கொண்டு ராஜவிஷயங்களிலாவது, அவர்களுடைய ப்ரஜைகளிடத்திலாவது தேசவிஷயங்களிலாவது தீங்கு விளையத்தக்கச் செய்கைகளைச் செய்வது ராஜ விச்வாசத்திற் கடுத்ததன்று.

அரசனது த்வாரபாலகர் உத்தரவின்றிராஜக்கிரகத்திலாவது ஸபையிலாவது உட்புகுவது தவறு. எவ்வளவு பழகினவனு யினும், அரசஸன்னிதானத்தில் ஏற்பட்ட ஒழுங்குப்படி போகாமற் போனுனுயின் அவன்ராஜாவுக்கு அபராதம்செய்தவனுவான். அரசனுக்கு ஸரிஸமமான யோக்யதையை யுடையவன் என்று பாவிக்கப்படும் சீமானுயினும் வேந்தர்ஸபையில் அரசன் இருவெனச்சொல்லப் பின்னர்தான் தனக்கேற்பட்ட ஆஸனத்தமா ராமேயன்றி, அதுவரையில் தனக்கு ஆஸனமிருக்கின்றதோ இல்லையோவென நிதானித்து நிற்கவேண்டும்.

ராஜஸம்மானத்தைப் பெறப்போகிறவரும் மற்று எவரும் எதிராகப்போய் நிற்காமல் இடது வலது பார்சங்களில் தாம் வந்த காரியத்தை இங்கிதங்களால் தெரிவித்துக்கொண்டு, ராஜ வீக்ஷிண்யம் எப்போது உண்டாகப்போவதென்று எதிர் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமேயன்றி அவன் மெய்காவலாளர் இருத்தற்குரிய ராஜஸந்நிதானத்தின் பின் எவரும் செல்லலாகாது.

ராஜ காரியங்களில் அரண்மனையின் அந்தப் புறத்திலோ வெளிப்புறத்திலோ வேலையிலமர்ந்திருக்கிறவன், தன்னுடைய காரியம் எவ்வளவுண்டோ அவ்வளவு வரையிலும் பார்த்துக் கொண்டு ராஜனுக்குத் த்ருப்தியாய் நடக்க வேண்டுமேயன்றி, அவன் ஏறும் யானை குதிரை, ரதம்முதலான வாஹனங்களில் ஏறிச்சவாரி விடுவதும், அவர் பவனி வருங்கால் குறுக்கிட்டுச் செல்வதும் ஸமயோசிதமாய் நடந்து கொள்வதும் அநுசிதமாக முடியும்படியான காரியமேயன்றி வேறன்று. ராஜாவினுல் ஆக்ஞாபிக்கப் பட்டாலன்றி, ராஜனுக்கு வேண்டிய

வன்என்ற விருதாஎண்ணத்துடன், அந்யருடைய கிரஹங்களிலோ மற்றெவ்விடங்களிலோ புகுதலும் அநர்த்தகரமாகும். ராஜனோடு நெருங்கின பழக்கமுள்ள எவரும், அந்தரங்க சுகிருத்தாயிருந்தாலும் மற்றெவராயிருந்தாலும், ஏதாவது நமக்கு அவரிடம் பேசவேண்டிய ஸந்தர்ப்பம் வந்தாலன்றி மற்றெப்போதும் மௌநிபூதனுயிருக்க வேண்டுவது அத்யாவசியம். மற்றெவருடனுவது பேசிக்கொண்டிருக்கும் ஸமயத்தில், நாம் சொல்லக்கூடியது ஸரியான விஷயமேயாயினும் நடுவேட்புகுந்து அரசனிடத்தில் சொல்லுதல் மரியாதைத் தப்பாகும். ஏகாந்தமாயிருக்கும் எச்சமயத்திலாயினும் நம்மிடத்திலிருக்கும் ப்ரியத்தினுல் அரசன் ஒரு ரஹஸ்யமான விஷயம்சொல்லியிருந்தால், அதனை வெளிப்படுத்துபவன் அரசனின் அந்தரங்கஸ்நேஹனுனுலும் பிராணஹானிக்கும் தேசப்ரஷ்டத்திற்கும் உரியனுவான். அரச ஸந்நிதானத்தில் போகவிரும்பும் எவரும் அரச ஸந்நிதானத்தில், எவ்வளவு கீழ்ப்பட்ட ஆஸனம் தமக்குக் கிடைக்குமோ, அப்படிப்பட்ட ஸ்தானத்தில் பிறருக்கு விரோதமில்லாமலெ உட்கார்ந்து, தாம் நினைத்தபடி கால்கைகளை நீட்டாமலும், கொஞ்சமேனும் சோம்பேரித்தனத்தைவெளிக்காட்டாமலும் ஆநந்தம் வந்தவிடத்து வெடிப்புச் சிரிப்புச் சிரிக்காமலும், அரசனை புருவம்நெரித்துப் பார்க்காமலும், கண்ணிமைத்திமைத்துப் பார்க்காமலும், ஜாக்கிரதையாய் விநயத்துடனிருக்கவேண்டும். அரசனுடன் நெருங்கிப் பழகும் பாக்யம் பெற்றவன் எவனும், அம்மன்னரின் ப்ரியத்தை ஸம்பாதிக்கவேண்டி, அவனை அநாவசியமாய் முகஸ்துதி செய்யாமலும், அவன் ஆநந்திக்கும்படியாப்பொய்யும் புரட்டுமான விஷயங்களைமெய்போல்புனைந்து கூருமலும் தானறியாத எவ்விஷயத்தையும் நன்கு அறிந்தது போல் கூருமலும் இருந்தாலன்றி அரச விசுவாஸத்திற்குப் பாத்திரனுகமாட்டான். அரசனுக்கு வேண்டிய உறவினர் எவராயினும், அவர்களிடத்து ஸ்நேஹம் ராஜஸேவகம் செய்யும் எவருக்கும்ருக்கவேண்டும். ராஜ்யத்திலிருந்து துரத்தப் பட்டவன்

ராஜனின் விரோதி முதலியவர்களிடத்திலுள்ள ஸ்நேஹத்தை, ராஜவிசுவாசியாகிய எவரும் நீக்கவேண்டும்.

ராஜனுக்கு வேண்டிய எப்படிப்பட்ட அந்தரங்க ஸ்நேஹனும், மன்னனுடைய புத்திரர்களிடத்தில் மிதமிஞ்சின விசுவாசத்தைக்காட்டினால், அரசன் ஸந்தேஹம் நிறைந்தமனஸுடன் அந்த அந்தரங்க ஸ்நேஹனையும் விரோதித்துத் தண்டிக்க இடமுண்டாகும். அரசனறிந்தவன் யான், எனக்கொன்றும் குறைவில்லை என்று வீண் மனோராஜ்யம் செய்துகொண்டு இறுமாப்புடன் நியாயவழி தவறி நடக்க முயல்வது ஸரியன்று.

நம்மை நன்கறிந்தவர் தானேயரசர் நம்மரசர், நமக்கொன்றும் செய்யார் என்று நினைத்து, அவர் உலாவரும் ராஜவீதியில் நீட்டினகாலை மடக்காமலும் அவர் பிரியப்படுவார் என்றுஎண்ணி புராணப்ரசங்கம் புரிந்துகொண்டு இருப்பவனும், ஸமயோசிதமாய்ப் பேசாமல், தான் எதுவேண்டுமென்றாலும் பேசலாம் என்று பேசி இங்கித மறியாமல் இருப்பவனும் அவஸ்தைப் படுவது நிச்சயமே. இளைத்துப்போன பாம்பு தானே, கஷ்டமடைந்த ப்ரம்மதேஜஸும் ஞானமுமுள்ள பிராமணன் தானே, மந்தராக்நிதானே, என்று அலக்ஷியம் செய்து ஜாக்கிரதையினின்று தவறக்கூடாது. தவறினால் அதனால் வரும் கேடுகள் அநந்தமாகும். ராஜனுவானே தான் என்று அவனறியாமல் அவன் வேஷம் போட்டு ஆநந்திக்கிறதாகக் கண்டாலும், சூதாடுமிடம் நாலுபேர் கூடி வம்புபேசுமிடம் முதலியவைகளில் ராஜஸேவகன் இருப்பதை அரசன்காணினும், அவன்எப்போதும்இவ்வித அஸம்பாவிதமான யோக்யதையுடையவன் என்று நினைத்து அவன் மீது ராஜனுக்கு வெறுப்புண்டாகி த்யஜிக்கப்படுவான். ஆகவே ராஜாங்கத்தில் உத்யோகம் செய்ய விரும்பும் ஒவ்வொருவரும், அதில் பிருத்யனாகவிருக்க விரும்பும் எவரும் நல்ல சுசி ருசியுடனும் மாசற்ற வஸ்திரங்களுடனும், ஸரிவர தேவதாபக்தியுடன் ராஜனை பூஜிக்காமற் போனால், அவர்கள் புத்ரமித்ர களத்

திரங்களாயினும், தண்டனைக்கே புரியவராவார் என்று ராஜ தர்ம நூல் விதிக்கின்றது. ஆகவே அரச அன்னத்தைச் சாப்பிட்ட எவரும், அரசனுக்கு க்ருதக்ஞதையுள்ளவர்களாகவே ஒழுகவேண்டும். அரசனுடைய அன்பு, அவரிடத்தில் ஜாக்கிரதை யுடனும் பக்தி சிரத்தையுடனும் ஒழுகி நடந்துவரும் ஸகலப்ரஜைகளுக்கும் உண்டு. இம்மாதிரியான ராஜ விஸ்வாசம், ராஜாக்ஞைக்குப் பயந்து நடத்தல் அவருடைய க்ஷேமத்தையே எப்பொழுதும் பிரார்த்தித்திருத்தல் முதலிய குணங்களெல்லாம் நமது இந்து தேசத்திய ஜனங்களுக்கு அநாதிகாலந்தொட்டு உடன் பிறந்த குணங்களாகவே யிருக்கின்றன.

பூர்வகாலம் முதற்கொண்டு, ஆளும் அரசனைத் தெய்வமாகவே கொண்டாடி அதற்குத் தக்கபடியே பூர்ண ராஜ விஸ்வாசத்திடன் ஒழுகிவரும் ஜனங்கள்நிறைந்த இப்பரத கண்டத்தில் பிறந்து பிரடிஷ் ஏகாதிபத்யத்தில் வஸித்து ஸுகம் பெற்று வாழும் நல்லதிர்ஷ்டத்தைப் பெற நாம் ஒவ்வொருவரும், நம்மைப் பூர்ணகருணையுடனும் மஹாமாட்சிமை தங்கிய ஏக சக்ராதிபதி ஐந்தாவது ஜார்ஜ்மன்னரிடத்தும், அவருடைய பிராண நாயகியாராகிய மஹாமஹிமைதங்கிய மேரி, அன்னையாரிடத்தும், அவர்கள் வம்சத்தினிடத்தும், அவர் ஆக்ஞைப்படி நம்மை யாண்டுவரும் வைஸிராய் கவர்னர் முதலிய ராஜப்பிரதிநிதிகளிடத்திலும் அவர்களுக்குட்பட்டு ராஜ்யத்தை நடத்திவரும் நிர்வாக உத்தியோகஸ்தர்களிடத்திலும் பூர்ணவிஸ்வாசத்துடனும், நெறிதவறுத வணக்கத்துடனும் நடந்து கொள்ளவேண்டியது நம் முக்கிய கடமையென நாமெல்லோரும் அறிந்து ஒழுக வேண்டும்.

சுப்பிரமணிய ஐயர்
தமிழ்ப்பண்டிதர்,
முனிசிபல் ஸ்கூல்,
மாயவரம்.

பந்தி வஞ்சனை.

நாம் நமது சக்ரவர்த்தினியின் அக்டோபர்மாதப்பிரதியில் விடுத்த "குடும்பப் பெண்கள் அநுசரிக்க வேண்டிய முறைகள்" என்ற விஷயத்தில் பந்திவஞ்சனையைக் குறித்து எழுதவோம் என்றமையாலும் உலகத்தில் அநீதி குறையவேண்டியும் இங்கு இவ்வியாசம் எழுதப் புகுந்தனம்.

பந்தி வஞ்சனை என்பது ஓரிடத்தில் ஒருவருக்குமேல் பந்தி போஜனம் செய்யும்போது பரிமாறுகிறவர்கள் பரிமாறும் பண்டங்களை ஒருவருக்குக் கொஞ்சமாயும், ஒருவருக்கு அதிகமாயும் ஏற்றவித்தியாசமாகப்பரிமாறுவதேயாம். போஜனம் என்றவிஷயத்தைக் குறித்துச் சிறிது பேசி மேலே கூறுவாம். போஜனம் என்பதை இருவகையாகக் கொள்ளலாம். சாதாரண போஜனம், விசேஷ போஜனம். சாதாரணமென்பது ஒருவன் தன்வீட்டில் தினப்படி புசிக்கும் போஜனமே. விசேஷ மென்பது, யாதாகிலும்பண்டிகைத்தினங்களிலும், சாமாராதனை, கலியாணம், வனபோஜனம் முதலான சமயங்களிலும், அநேகவிதமான காய்கறிகள் தின்பண்டங்கள் முதலியனபக்குவம்செய்து அதிதிகளுக்கும், பந்து மித்திரர்களுக்கும் அன்னமளிப்பதே. இவ்வித விசேஷ போஜனத்தை அநேகமாக யாவரும் விரும்புவார்கள். தவிர இவ்வித போஜனம் செய்து வைப்பவரும் தம்மாலியன்றமட்டும் பண்டங்களை நன்றாகத் தயாரசெய்து அங்ஙனம் தயாரிக்கப்பட்டவைகள் விருந்தினர்களுக்கு வெகு உருசியாக விருந்து திருப்தியையும் ஆனந்தத்தையு முண்டாக்கி அவ்விதத் திருப்தியினால் தமக்கு இகபரசாதகங்களுண்டாக வேண்டுமென்கிற எண்ணங்கொண்டே செய்விக்கின்றனர். தெய்வ சாமாராதனை செய்கிறவர்கள் மகாபயபக்தி விசுவாச வினயத்துடன் எல்லாவற்றையும் சேகரித்து விருந்தினர்கள் போஜனம் அருந்தித் திருப்தியாகும்

வரையில் அவர்கள் கொள்ளும் பயத்தை நம்மால் இங்கு விவரித்தல் கஷ்டசாத்தியம். தவிர கலியாண சமயங்களில்விருந்தினர்களுக்கு மனங்கோணாமல் உபசரிக்கவேண்டியது முக்கியகடமையாகின்றது. இஃதிங்ஙனமிருக்க, நடுவிலிருக்கிறவர்கள் பகைவர்களையும், தங்களுக்கு வேண்டியவர்களையும் பிரத்தியேகமான இடங்களிலேயும், மற்றவர்களைததனிமையான இடங்களிலேயும் உட்காரவைத்து முந்தியவர்களுக்கு ஒருவிதமான சாப்பாடும் ஏனையோருக்கு மற்றொருவிதமாயும் போஜனம் அளிக்கிறார்கள். இதன் மத்தியில் இவ்விரு வகுப்புகளிலேயே தங்கள் தங்கள் இஷ்டர்களுக்கு அதிகமாயும் மற்றவர்களுக்குக் கொஞ்சமாயும் பரிமாறுகிறார்கள்.இவ்விதம் பரிமாறப்படுவது விசேஷமாகத்தின்பண்டங் (பக்ஷணங்கள்)ளும், நெய்யுமேயாம். இவைகளை விசேஷமாக வியாதிஸ்தர்களைத் தவிர மற்றவர்கள் விரும்பாதிரார்கள். தின்பண்டங்களின் சுவை மொத்தத்தில் எல்லோருக்கும் ஒரேவிதமாகத்தானிருக்கும். இவ்விதமிருக்க ஒருவருக்கு அதிகமாயும் அவருக் கருகாமையில் அவர் கலத்தில் பரிமாறப்படுவதைப் பார்த்திருக்கும், மற்றவருக்குக் கொஞ்சமாயும் பரிமாறும்போது கொஞ்சமாய்ப் பரிமாறப்பட்டவருடைய மனநிலை எங்ஙனமிருக்குமென்பதை இதைப் படிப்பவர்களே அறிந்து கொள்ளக்கூடுமல்லாது எழுதிச்சாத்தியமாகாது. ஹா! இருவரும் மானிடப்பிறப்பே. ஒருவரைப் படைத்த மாதிரியாகவே தானே மற்றொருவரையும் கடவுள் படைத்திருக்கிறார்; ஆனால் ஒருவர் கொஞ்சமாயும் மற்றொருவர் அதிகமாகவும் சாப்பிடக்கூடுமென்று சொல்லுதல் பொருந்து மென்றாலும் நாம் பேசும் விஷயம் அங்ஙனமல்ல; ஒவ்வொருவரையும் என்னென்னஎவ்வளவு வேண்டுமென்பதைக் கேட்டு அதிகம் வேண்டுவோருக் கதிகமாயும் கொஞ்சம் விரும்புவோருக்குக் கொஞ்சமாயும் பரிமாறும் பக்ஷத்தில் பந்தி வஞ்சனையே ஏற்படமாட்டாது.

அவரவர்களிஷ்டப்படி ஒவ்வொருவருக்கும் வேண்டிய மட்டும் போட.த்தங்களுக்கியலாவிடில் யாவருக்கும்இவன் பணக்

காரன், இவன் வேண்டியவன், இவனுக்கு அதிகம் போட வேண்டும், மற்றவர்களுக்குக் கொஞ்சம் போடவேண்டும் என் கிற வித்தியாசமில்லாமல் யாவருக்கும் ஒரேவிதமாய் ஏதோ தன் சக்திக்கியன்றமட்டும் பக்ஷபாதமில்லாமல் பரிமாறி விருந்தின ரைத் திருப்திசெய்யவேண்டும். அதல்லாது வஞ்சனைசெய்து ஒரு ஜிலேபியோ, அல்லதுஇரண்டு முட்டை நெய்யையோ, இஷ்டர் களுக்கு ஒரு நாள் அதிகமாக இடுவதினால் யாது சித்திக்கிறதோ தெரியவில்லை. அவர்களுடைய பிரியத்தை, பசித்திருக்கிறவன் வயிறெரியச்செய்தா காட்டவேண்டும்? இது தானா சமயம்? தனிமையாயிருக்கும்போது என்னவிதம் வேண்டுமோ அவ்விதங் கள் யாவையும் செய்து போட்டுக் காட்டலாகாதா? மற்றும் பணமுள்ளவர்களை இங்ஙனம் தானா உபசரிக்கவேண்டும்.? இவர் கள் உண்பது தானா உணவு? இப்படி இவர்களுக்கு அதிகமாக இட்டால் தானா திருப்தி? பணமுள்ளவர்களில் விசேஷமாக அநேகருக்கு (எல்லாருக்குமல்ல) திருப்தியே எவ்விதத்திலும் உண்டாகிறதில்லை. அதிலும் இவ்விதத்தின்பண்டங்களை அதிக மாகப் போடுவதினாலா திருப்தியுண்டாகப் போகிறது? ஆனால் ஒரு ஏழையோ தனக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்தி யடைகிறவன். அதிலும் தனக்குக் கிட்டாதது கிட்டினால் வெகு திருப்தி யடைகிறான். தின்றுவிட்டு இகழமாட்டான். பணக் காரனோ யாதாயிருந்தபோதிலும் இது நன்றாயில்லை; அது நன்றா யில்லை யென்று குணதோஷங்கள் கூறுவானே யல்லாது திருப் திப்படமாட்டான். அதிதிகள் திருப்தியடையாமல் போனால் நமது போஜனமளிப்பதின் பிரயோசனம் நிஷ்பிரயோசனமே. நிற்க, தானங்களிலெல்லாம் மிகச்சிறந்தது அன்னதானமாகும். ஏனெனில் இதுவே யாவருக்கும் வெகுதிருப்தியைத் தரக்கூடி யது. வேறெதுவுமல்ல. ஒருவனுக்குச் சாப்பாட்டைத் தவிர திரவியம் பூமி முதலிய வேறெதுவானாலும் சரியே; ஒரு லக்ஷம் ரூபாய் அல்லது லெக்ஷம் ஏகரா பூமி கொடுத்தபோதிலும் இன் னும் கொஞ்சம் கொடுத்தால் தேவலாமொன்றிருக்குமே யல்லாது

திருப்திகொள்ளான். ஆனால் அன்னமோ வயிறு கொண்டமட்டும் தான் தின்னலாமே யொழிய நிறைந்து விட்டால் போதும் போதும் என்று சொல்வானே யல்லாது மறுபடியும் ஒரு துளி கூட விரும்பான். இப்பேர்க்கொத்த அன்னதானம் செய்யத்தவம் செய்திருக்கவேண்டும். இம்மகிமை வாய்ந்த தானம் செய்யும் பொழுது ஏற்றவித்தியாசமாகப் பரிமாறி அதிதிகளின் அதிருப்தியைச்சம்பாதிப்பவர்களின் புத்திக்கூர்மையையும் மனிதத் தன்மையையும் யான்என்னென்றுசொல்வது? கேவலம் இப்பொழுது தின்று சற்று நேரத்திற்கெல்லாம் மலஜலமாக மாறி உபயோக மற்றதாகிவிடும் இத்தின்பண்டங்களைப் பக்ஷபாதமாகப் பரிமாறும் பாவிகள், வேறு சிலகாலம் நிலைத்திருக்கும் காரியங்களில் என்னவேலைகள் தான் செய்யத் துணியமாட்டார்கள்!

இவ்விதம் பந்திவஞ்சனைகளில் சிற்சில சமயங்களில் பிரமாதமான மனஸ்தாபம் நேரிடுகின்றது. நாம் இதைச்சாதாரணமாகக் கலியாண வீடுகளில் பார்க்கலாம். ஒருவன் யோக்கியனாயிருந்தால் தமக்கு அதிகமாகப் போடப்பட்டதை, இது ஜனங்களின் அறிவீனத்தின் பயன் என்றும், மற்றொருவன் பார்த்திருக்க நாம் மாத்திரம அதிகம் புசிப்பது மிகவும் தகாத காரியம், மானிடஜென்மத்திற்கு அழகன்று என்றும்நிருக்காலும் புசியான். அஃதல்லாது தானே சாஸ்வதம், தன் வயிறு நிரம்பினால் போதும், தனக்குக் கிட்டினால் போதும், மற்றவர்கள் இருந்தாலென்ன, இறந்தாலென்ன என்று நினைக்கும் மூடர்கள் தான் பிறரைக் கவனியாது உட்கொள்வார்கள். தெருக்களில்குழந்தைகள் ஒருவருக் கொருவர் ஏதாகிலும் தின்றுகொண்டிருக்கும் போது "அடே நீ எனக்குக் கொடுக்காமல் திங்கிறாயே உனக்கு வயிற்றை வலிக்கும் பாரு" என்று சொல்வதை நாம் கேட்கிறோம். இப்படியிருக்க நன்றாய்ப் பகுத்தறி வடைந்த ஒரு மனிதன் பிறர் கொஞ்சமாகச் சாப்பிடத் தான் அதிகமாகத் தின்பதென்றால் இது எங்ஙனம் தேகத்தில் பயனை விளைக்கும்? இதை அறிகிறார்களில்லை. தவிரவும் இவ் வஞ்சனையை மாப்பிள்ளை மாமி

யார் வீடுபோயிருக்கும் காலங்களில் மாப்பிள்ளைக்கும் அவன் கூடப்போயிருக்கிறவர்களுக்கும் பரிமாறும்போது விசேஷமாகக் காணலாம். மாப்பிள்ளையின்மேல் மாமிக்கு இருக்கும்பிரியத்தைக் காட்ட இதுதான் சமயம் போலும்! தவிர ஒரே குடும்பத்தில் சம்பாத்தியமுள்ளவனுக்கும் அஃதில்லாதவனுக்கும் பரிமாறும் போதும், பெற்றோர்கள் முதுமையடைந்தோ அல்லது அதிகத் தண்டாவுக்குப் போகாமல் சாதுக்களாயிருந்து குடும்பம் நாட்டுப்பெண்கள் அதிகாரத்தில் வந்த வீடுகளிலோ, தமையன் தம்பிமார்களை ஆதரிக்கவோ அல்லது அவர்களுடன் சேர்ந்து வாழவோ நேரும் வீடுகளிலும, தமையன் சம்சாரம்தன்புருஷனுக்கோர் விதமாயும் அவன்சகோதரர்களுக்கு ஓர் விதமாயும் "இது இவாளுக்குப் பிரியம்; அதுன்னு இவாளுக்கு ரொம்பப்பிரியம்" என்று சகோதரர்கள் பார்த்திருக்கக் கொடுப்பதும் புருஷனும் வாய்திறவாமல் தனக்குக் கிடைத்தால் போதும் என்று தின்பதும் ஒருவனுடைய முதல் சம்சாரத்தின் குழந்தைகள் இளைய சம்ஸாரத்தின் ஆதரவுக்குட் பட்டிருக்கும் வீடுகளிலும் சாதாரணமாகப் பிரதிதினமும் காணலாம். ஆனால் நாம் எல்லோரையும் இப்பேர்க் கொத்தவர்கள் என்று சொல்லவில்லை. உலகத்தில் நல்லவர்களுமிருக்கிறார்கள். கெட்டவர்களுமிருக்கிறார்கள். நல்லவர்கள் மிகச்சொற்பமே. இக் கொடியவஞ்சனையைச் செய்பவர்கள் அநேகரிருப்பார்கள். அவர்களைக் குறித்தே இங்கு பேசுவது. இவர்கள்தாங்கள் எத்தனைகாலம் உலகத்தில் ஜீவித்திருக்கப் போகிறார்கள்? மனிததேகம் நித்தியமா அநித்தியமா! எந்தவேளையில் என்னவரப்போகிறதோ என்பனவற்றைச் சற்று யோசித்தார்களேயானால் இவ்வித வஞ்சனையை ஒருக்காலும் செய்யத் துணியார்கள். நண்பர்காள்!:—

"இப்பவோ பின்னையோ சற்றுநேரத்திலோ இரவுதான் படுநேரமோ,
இரவிலோ பகலிலோ உதயகாலத்திலோ யெந்தெந்த வேளைதனிலோ,
அப்பிலோ தீயிலோ நாயிலோ பேயிலோ அரவுதான் பெறுமிடியிலோ,
ஆறுதபுண்ணிலோ நடநோயி தன்னிலோ ஆயுதங்களினாலேயோ,
செப்பரிய வீட்டிலோ காட்டிலோ என்னுயிர் பிரிந்திடும் நடராஜனே"

என்ற பாவிற்கேற்ப நமக்கு இன்னவேளையில் இன்னநேரிடு மென்பதை அறிவது கஷ்டசாத்தியம். "காயமே பொய்யடா இது நல்ல காற்றடைந்த பையடா........." என்ற ஆன்றோர் வாக்கின் பிரகாரம் நமது தேகம் சாஸ்வதமன்று, மண்ணுக் கிரையாகும் ஒரு தோல்பை என்பதை மனதில் உறுதியாகக் கொண்டு அநீதமான காரியங்களைச் செய்யின் எல்லாம் வல்ல இறைவன் நம்மைத் தண்டிப்பான் என்பதை மனதிலிருத்தி உங்களில் யாராவது பிரஸ்தாப வஞ்சனையைச் செய்து வந்தால் இனியாவது விட்டு விட்டு நற்குண நற்செய்கைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவீர்களாக. "ஊரார் பிள்ளையை ஊட்டிவளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பதன்றோ முதுமொழி.

A. G. ரத்தினம்.

வித்வான் தாதாபாய்.

நான் சிறுவனாயிருக்கும்பொழுதே என்மனதைக்கொள்ளை கொண்ட நினைவுகளுள் ஒன்று என்னவென்றால், என் தந்தையார் இவ்வுலகம் விட்டு நீங்கிவிட்ட படியால் மற்றச் சிநேகிதர்களைப்போல, இருளை விளக்கும் மதியும் என்னை நேசித்து எனக்கு அன்புகாட்டியது என்பதே. இது என் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் இன்றளவும் பதிந்துகிடக்கிறது. நான் வீட்டின் வாயிலில் போனாலுஞ் சரி புறக்கடையில் போனாலுஞ் சரி எங்குசென்றாலும் அங்கேயும் சந்திரன் என் கூடவே உலாவி நின்றதுபோல் தோன்றியது. அப்பொழுது ஒற்றுணர்ச்சி என்பதை மிகவும் விரும்பினேன். இதை இன்றும் விரும்புகிறேன்.

என்பாலியாவஸ்தைகளுள் மற்றொரு விசேஷம். என் தாயார்சொல்லக் கேட்டுத் தெரியுமேயல்லாது எனக்குச் சுயானுபவம் கிடையாது. என்தாயார் சொல்லுகிற பிரகாரம், யாராவது

என்னை வைதால், நான் உடனே அவர்களுக்கு "அந்த உங்கள் வசவுமொழிகள் எல்லாம் உங்கள் வாயுடனே நிற்கட்டும்" என்று பதில் சொல்வது வழக்கமாம்.

நான் என் பாலியத்தில் பந்தாட்டத்தை மிகவும் விரும்பித் தினசரி அதைப் பயிற்சி செய்வேன். அதில் எனக்கு வெகுவான சாமார்த்தியமும் இருந்தது என்று எல்லாரும் சொல்லிக் கொண்டார்கள். அந்த ஸ்வாரஸ்யமான விளையாட்டில் தான் என் கூடப்படித்த பையன்களுக்கும் எனக்கும் சதா ஞாபகம். அது விஷயத்தில் கொளுத்தும் சூரியனையும் மதியோம். இடைவேளைச் சாப்பாட்டுக்காக விடும் அரைமணி நேரத்திலுங் கூட நாங்கள் நடுவெயிலில் கோட்டைமைதானத்தில் அந்த விளையாட்டை விளையாடுவோம்.

எண்சுவடி எனக்குக் கரைதலைப் பாடமாய்த் தெரியும். மனக் கணிதம் வெகு விரவில் தீர்த்துவிடுவேன். அத்துடன் சிறியவனாயும் நல்ல நிற அழகுடையவனாயு மிருந்தேன். அதனாலே நான் படித்த பள்ளிக்கூடத்தில் எல்லாருடைய கவனமும் கவரும் காக்ஷிப்பொருளாய் இருந்தேன். சிலசமயங்களில் எல்லாப் பையன்களையும் ரஸ்தா ஓரமாய் வரிசையாய் நிறுத்தி கணக்குப் போடுவார்கள். அப்பொழுது சுற்றியிருக்கும் ஜனங்கள் "சபாஷ் சபாஷ்" என்று சொல்லும்படி மற்றப் பையன்கள் கூட, போடும் தீர்வைகளைச் சீக்கிரத்தில் யுக்தியாய்க் கழிப்பேன்.

நல்ல நிறமும் உருட்டிவிட்ட அழகான உடம்பும் எனக்கிருந்ததனாலே கல்யாண சமயங்களிலும் ஊர்கோலங்களிலும் பல ஆடம்பரத்துடன் விளங்கி வந்தேன். அவ்வமயங்களில் ஓர் போர் வீரனைப்போல் அல்லது கப்பற்றலைவன்போல் அல்லது பகட்டான சரிகைப் பட்டாடை யுடுத்த அரசகுமாரன்போல் இருப்பேன். இக்காக்ஷிக் குழந்தையின் சிநேகர்களும் உறவினர்களும் "இவன் என் கண்மணி! என் துரை! என் அருமைத்துரை" என்று சொல்வார்கள். நான் அப்பொழுது என் பிற்காலத்தில்

அத்துரைகள் வாழும் இங்கிலாந்து நாட்டில் வசிப்பேன் என்றும், வாஸ்தவத்தில் யாண்டும் அவர் உடையைத் தரிப்பேன் என்றாவது சுவப்பனத்திற் கூடக் கொஞ்சமேனும் நினைக்கவேயில்லை. இவ்வூர்கோலங்களும் அப்பொழுது உடுத்த உடைகளிலிருந்த சந்தோஷமும் முக்கியமாய் அந்த இங்கிலீஷ் ஆஸ்தான உடையிலிருந்த அபிமானமும் ஒரு சமயத்தில் என் முன் நர்த்தனம் பண்ணின. எப்பொழுதென்றால், சீமையிலுள்ள இராஜீயசமாஜ ("Imperial Institute")த்தின் கட்டடங்களைப் புதிதாய்த் திறப்பதற்காக மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியவர்கள் விஜயம் செய்தார்கள். ராணியார் வரவை ஏற்க அச்சமாஜ நிர்வாகச்சபையாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுள் நான் ஒருவனாயிருந்தேன். அப்பொழுது அந்த இங்கிலீஷ் ஆஸ்தான உடையைத் தரித்திருந்தேன். "ஆம், வாஸ்தவத்தில் நான் இப்பொழுது ஆஸ்தான உத்தியோகஸ்தனாகவே யிருக்கிறேன்" என்ற எண்ணம் என் மனதை ஊடுருவிச்சென்றது எனக்கு இப்பொழுது நன்றாய் ஞாபகம் வருகிறது.

எனக்குப் பாலியத்தில் இருந்த சந்தோஷங்களில் இன்னொன்று என்னவென்றால், குஜராத்தி பாஷையில் எழுதப்பட்டுள்ள பாரசீகஇதிகாசமாகிய "ஷாநாமி" என்ற நூலைப்பார்ஸிகள் பலருக்கும் படித்துக்காட்டுவேன். இம்மாதிரி வாசித்ததெல்லாம் என் குணவிசேஷங்களைச் சீர்படுத்திச் சிறப்புறச்செய்வதில் முக்கிய துணையாயிருந்தது என்று நான் சொல்வது அனுவசியமாகும்.

சிலகாரியங்கள் சிறியனவாய்த் தோன்றினாலும் பெரும் பயனை விளைவிக்கின்றன. சென்ற நூற்றாண்டின் இருபதாம் வருஷங்களில் பம்பாய் பட்டணத்தில் "சுதேச வித்யாபி விருத்தி சமாஜம்" (Native Education Society.) என்று ஒன்று ஸ்தாபிக்கப் பட்டது. அச்சமாஜத்தார் ஆங்கில பாஷையும்

சுதேசபாஷையும் கற்றுக்கொடுக்கும் பாடசாலை ஒன்று ஏற்படுத்தினார்கள். நான் வாசித்துக்கொண்டிருந்த பள்ளியின் ஆசிரியருக்கு இச்சங்கமுயற்சியைப்பற்றி ஒன்றும்தெரியாது. ஆனால் அவர்கள் நடத்தும் சாலை சர்க்காராலேயும் ஆளப்பட்டுவந்தது என்றுமட்டுந்தெரியும். ஆகையினாலே அவர் தன்மகனை அப்பாடசாலைக்கு அனுப்பினர். அப்படியே என்னையும் அனுப்பும்படி எனது தாயாரைவேண்டி இசையப்பண்ணினர். இதுவே என் வாழ்வின் பின் நடவடிக்கைகளுக்கு அஸ்திபாரமாயிற்று. அக்காலத்தில் பையன்களுக்கு சம்பளமில்லாமல் கல்வி கற்றுக்கொடுத்து வந்தார்கள். இக்காலத்திய சம்பளம் அப்பொழுது ஏற்பட்டிருந்தால் என் தாயாரால் அதைக்கொடுக்க இயன்றிருக்காது. இச்சம்பவமே நான் பின் காலங்களில் மூலாதாரகர்மப் படிப்பு வேண்டியது அவசியம் என்று சொல்லச்செய்தது. ஏழையாயிருந்தாலுஞ் சரி, பணக்காரனாயிருந்தாலுஞ் சரி தேசத்து எல்லாக் குழந்தைகளும் தங்களால் கற்று ஏற்று விருத்திபண்ணக்கூடிய படிப்பை காலத்தில் பெறவேண்டுமென்ற கொள்கையைத் தீவிரமாய் நிலை நிற்கச் செய்ய எண்ணத் தூண்டியதுவும் இவ்வனுபவமே.

எனக்கு, வயது பதினைந்தானபோது, உலகஞானம் பிறந்தது. அந்தரஸ்தாவின் அந்த இடத்தில் கெட்டவார்த்தைகள் பேசுவதேயில்லை என்று சபதஞ்செய்து கொண்டேனே அது நேற்று நடந்தாற்போலிருக்கிறது. ஞாபகத்தில் அந்த நிமிஷம் முதல் நான் படிக்கப் படிக்க "இன்னது செய்ய வேண்டும்" இன்னது செய்யக் கூடாது" என்ற பல நியமங்களை நோற்றுக் கொண்டேன். அவைகளை அநேகமாய்த் தப்பவிடாமல் உண்மையில் பரிபாலித்தே வந்திருக்கிறேன் என்று நான்நிச்சயமாய்ச் சொல்லுவேன்.

நான் சிறுவனாயிருக்கும்போது தினப்போஜனம் செய்யுமுன் சிறிது குடிப்பது வழக்கம். ஒரு நாள் வீட்டில் குடிக்க

ஒன்றுமில்லை. ஆகையால் எதிரில் இருக்கும் ஒரு சாராயக்கடை யில் போய்க்குடிக்க அனுப்பப்பட்டேன். அங்கே எனக்குண்டான அவமானம் தாழ்மை இவைகளின் உணர்ச்சியை நான் ஒருக் காலும் மறக்கவேயில்லை. அதுவே எனக்குப் போதுமென்று ஆய் விட்டது. ஒரு குடிக்கடையிலாவது என் கால் அடி யெடுத்து வைத்ததேயில்லை.

நான் வாசிக்கபபோன பள்ளிக்கூடத்தில் இலக்கியவகைக்கு ஒரு ஆங்கில ஆசிரியரும் கணக்குவகைக்கு ஒருஆங்கிலஆசிரியரும் ஆக இருவர் இருந்தனர். அவர்களுக்குள் ஏதோகொஞ்சம்மனஸ் தாபம் ஏற்பட்டு ஒவ்வொருவரும் தன்வகைப்படிப்புக்குத் தானே அதிகாரியாகிப் பள்ளிக்கூடத்தை இரு கூறிட்டுக்கொண்டனர். இவர்களில் ஒருவர்மிகவும்கண்டிப்பானபோதகர்; மற்றவருக்குக் கண்டிப்பு என்பதே இன்னது என்று தெரியாது. நான் இரண் டாவது சொல்லப்பட்டவரின் கீழ் படிக்க நேரிட்டது. வாஸ்த வத்தில் எங்கள் இஷ்டப்படி எல்லாம் செய்ய எங்களைவிட்டு விட்டார். ஆனால் சோம்பேறியாய் வீண்காலங்கழிக்க எனக்கு மனந்துணியவில்லை எப்படியாவது ஒருவிதம் சுறுசுறுப்பாய் இருக்கத் தோன்றியது. குறிப்பிட்ட பாடங்களைக் கட்டாய மாய்ப் படித்து ஒப்புவிக்க வேண்டுமென்ற நிபந்தனையே கிடை யாது ஆகையால் தகுந்தவேலை ஒன்றைத் தேடிக் கொண்டேன். எனக்கு ஞாபக சக்தி மிகுதி. ஒருதரம் கேட்ட எக்கதையையும் ஒன்றுகூட விடாமல் சொல்லியவண்ணம் சொல்லத்தெரியும். இம் மாதிரி அநேகங்கதைகளைத் தெரிந்துகொண்டேன். ஆகவே என் னைச்சுற்றியிருக்கும் சிநேகர்களுக்கு விடாமல் கதை திரும்பத் திரும்பச் சொல்லுவதிலேயே பள்ளிக்கூடக் காலத்தைச் செல வழித்தேன் ஒருநாள் முழுவதும் பள்ளிக்கூடம் போகாமல்விளை யாட்டிலேயே கவனத்தைச் செலுத்தும்படி அவ்வளவுக்குப் பள்ளிக்கூடத்தில் ஏனென்றுகூடக் கேட்பாரற்றுக் கிடந்தது. இம்மாதிரியாகஒருவருஷம்நான் வீணாகக்கழிக்கநேர்ந்தது. அந் தப் படிப்பற்றிருந்த ஒருவருஷமும் எனக்குக்கொஞ்சங்கூட பிர

யோசனையில்லாமல் வீணாய்ப் போயிற்று என்று நான் சொல்ல மாட்டேன் கதை சொல்வதில் கற்பனாசக்தியும் விளையாட்டு நேர்த்தியும்பையன்களுக்குள் என்னைத் தலைவனாக்கிற்று. அதனாலே எனக்குமனவுறுதியும் நிச்சயபுத்தியும் தற்கௌரவமும் நன்றாய்ப் பிடிபட்டன

பள்ளிக்கூடப்பரீக்ஷை ஒன்றில் எனக்குக்கிடைக்குமென்று எண்ணியிருந்த பரிசை மற்றொருவன் கணிதசங்கிரகத்தை மனப்பாடம் பண்ணி அடித்துக்கொண்டுபோய்விட்டான். ஆனால் வெகுமதியளிக்கும் சமயத்தில் புஸ்தகத்திலகப்படாதமற்றப்பொதுக் கேள்விகள் போடும்போது ஜவாப்செல்லமுடியாமல் தத்தளித்தான். அப்பொழுது அச்சமயத்தைவிடாது கைக்கொண்டு முன்னுக்குப்போய்ச் சரியானபதிலைஉரைத்தேன். அங்கேயிருந்த ஒரு ஆங்கிலப் பிரபு எனக்குஒரு வெகுமதிகொடுத்தார். இன்னும் அப்பொழுது அங்கே விஜயஞ்செய்திருந்த யாத்திரி பாஸ்டன் சீமாட்டிதன் "மேற்கத்திய இந்தியா" என்னும்நூலின் அவ்விஷயத்தை எடுத்து எழுதியிருக்கின்றனள். ஆக இத்துடன் எனது பாலிய சமாசாரங்களை நிறுத்துகிறேன்.

பார்ஸிபள்ளிக்கூடம் இங்கிலிஷ் பள்ளிக்கூடம் இவைகளில் வாசித்தபிற்பாடு நான் எல்பின்ஸ்டன் கலாசாலைக்குச் சென்றேன். அங்கேயும் எனக்கு அதிர்ஷ்டமிருந்தது. பள்ளிக்கூடங்களில் இருந்தமாதிரி இக்கலாசாலையில் சம்பளம் கிடையாது. மற்றுஅக்கலாசாலையில் புகவேண்டுமானால் அவர்கள் அளிக்கும் (ஸ்காலர்ஷிப்) பெற்றால் தான் புகலாம். அதையும் அடைய நான் பாக்கியம் பெற்றிருந்தேன்.

இப்பொழுது வாசித்த நூற்களே என்குணத்தையும் மனத்தையும் சித்தவிர்த்தியையும் நல்லவைகளாக்கின. அவைகளில் பிர்தோஸ் குஜராத்தியில் எழுதின 'சகாநாமி'யும்"ஸௌராஸ்டிரியர்களின் கடமைகள்" என்னும்புஸ்தகங்களுமே பிரதானமானவை. நல்லெண்ணம், நல்லவார்த்தை, நற்செய்கை இவை மூன்றுமே

நான் இவைகளிலிருந்து கற்றபாடங்கள். ஆனால் நான் மிகுதியாய் வாசித்து அனுபவித்தது ஆங்கில இலக்கியமே. வாட்ஸன் எழுதிய "மன அபிவிருத்தி" என்னும் புஸ்தகமே என் யோஜனை முறையையும் எழுதும்நடையையும் ஸ்திரப்படுத்தியது, அவையாவன, மிகையின்றித் தெளிவுபடக் கூறல், எளியநடை, கலக்கமின்மை. ஆனதால் அன்று முதல் படாடோபமான மொழிகளைக் கூறுவதையும் எழுதுவதையும் விட்டு விட்டேன்.

படிப்பு அதிகரிக்க, எண்ணங்களும் ஞாபகங்களும் பல துறைகளில் தீர்க்கம்பெறத் தொடங்கின. ஏழைகளின் பணத்தினலேயேநான்வாசித்தேன். நானும் ஏழை, என்புஸ்தகங்கள் கூட என்பணக்காரத்துணைவன் 'காமா' என்பவன் வாங்கிக்கொடுத்தவைகளே. அவன் குடும்பத்தாருடன் பின் நான் நிரம்பநெருங்கியபழிக்கம்பெறறேன். என் வித்வாமிசமும் அதனில் எனக்குக் கிடைக்கும் பிரயோஜனங்களும் பொதுஜனங்கள் உதவியால் எனக்குக் கிடைத்திருக்கின்றமையால் என்னால் செய்யககூடிய, அவைகளைத் திரும்பி அவர்களுக்கு நான் செய்யக்கடமைபட்டிருகிறேன் என்ற எண்ணம் அதிகரித்துக்கொண்டேவந்தது. நான் ஊழியனயிருக்கவேண்டும் பொதுஜனங்களுக்குப் பிரயோஜனமாயிருத்தல் வேண்டும் என்ற எண்ணங்கள் சுழன்று ஒரு விதப்பட்டுக்கொண்டிருக்குஞ் சமயத்தில் கிளார்க்கன் எழுதிய "அடிமைவியாபாரம்" என்றபுஸ்தகமும்உத்தமதயாளுலோகோபகாரி ஹோவார்ட்ஜீவியசரித்திர புஸ்தகமும் என்கையிற்கிடைத்தது. அவைகளைவாசித்தது அஸ்திவாரம் நன்றாய் முளைபிடித்தது போலாயிற்று. சமயம் வாய்க்கும் போதெல்லாம் ஜனங்களுக்கு உழைக்கவேண்டுமென்பதே என் ஆத்மாவின் முக்கிய ஆசையாயிற்று.

நான் கலாசாலையில் உயர்ந்தவகுப்பில் படித்துக்கொண்டிருக்கும்பொழுது, அக்காலத்து வித்தியாவிசாரணை கர்த்தாவாயிருந்த ஸர் எர்ஸ்கின் பெரிதுரை என்மேல் நல்லபிப்பிராயங்

கொண்டு என்னைச்சீமைக்குப்போய்ச்சட்டம் கற்று பாரிஸ்டராய் வரச்செய்யவேண்டுமென்ற தன் இஷ்டத்தைத் தெரிவித்தார். மேலும் போய்ப்படித்துவரச்செல்லும் செலவில் ஒருபாதி என் மூர்த்தோர் கொடுப்பாராயின் தான் மற்றபாதியைத் தன்கையிலிருந்துகொடுப்பதாகவுஞ் சொன்னார். சீமைக்குப்போனால அங்குள்ள பாதிரிமார்கள் என்னைக்கிரிஸ்தவராக்கிவிடுவார்கள் என்ற பயமோ ஏதோ சிலதப்பபிப்பிராயமோ என்மூர்த்தோர் கொண்டதினால் அவர் யோசனை முடிவுபெறவில்லை.பல்லாண்டுகளுக்குப் பின்னர் இச்சீமான் இந்தியாமந்திரிசபைஅங்கத்தினராயிருந்தார். அப்பொழுது நான் அவருடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது நான் சட்டம் படித்து லாயராய் வரவேண்டுமென்று தான்சொன்னயோஜனைதவறிப்போனதைப்பற்றி சந்தோஷித்தார். ஏனென்றால் நான் லாயராய் இருப்பதை விட பரோபகாரம் செய்வதிலேயே என் உயிர் இச்சைகொண்டதென்று திட்டமாய்த்தான் சொல்வதாகச்சொன்னார்.

வாஸ்தவத்தில் இப்பொழுது ஒரு ஜீவனோபாயம் தேடும் காலம் கிட்டிவிட்டது. துரைத்தன உத்தியோகம் ஒன்று கட்டாயமாய்க் கிடைத்துவிட்டது என்றுஎண்ணினேன். பம்பாய்வித்யா விசாரணை சபைக் காரியதரிசி என்மேல் அன்புகொண்டு சர்க்கார் காரியதரிசி (Secretaniat) கச்சேரியில் எனக்கு ஒருவேலை வாங்கிக் கொடுத்தார். இது ஒரு பெரிய அதிர்ஷ்டம் என்று நினைத்தேன். ஆனால் நல்வேளைபாய் நான் அதை ஏற்றுக்கொள்ள முடியாமற் போயிற்று. உண்மையில் அப்படி நடந்ததே எனக்கு மிகவும் அனுகூலமாயிருக்கக் கூடியது; இல்லாதபோனால் நான் இன்று சர்க்கார்க் கீழ் உத்தியோகஸ்தரில் ஒருவராய்த் தான் தடங்கற்பட்டு இருந்திருப்பேன்.

நான் 1855ம்ஹ "காமா அண்டு கம்பெனி" யென்றபெயரை நாட்டி ஒரு இந்திய வியாபாரஸ்தலம் லண்டன்மாநகரத்தில் ஏற்படுத்தும் பொருட்டுச் சேர்ந்த மூவரில் ஒருவராய்இங்கிலாண்

டுக்குப் போனேன். அப்படிப்போவதற்கு முன் ஆறு ஏழு வருஷங்களாக, ஆகாரம், படிப்பு, ராஜீபவிருத்தி, மதம் முதலிய பலசமாசாரச் சீர்திருத்தங்களில் என்மனம் சென்றிருந்தது. ஆகா! அவ்வருடங்களை என்னென்று சொல்வேன்.

பெண்கல்வி, உல்லாசக் கச்சேரிகளிலும் தோட்டக் கச்சேரிகளிலும் மற்ற லௌகிக விசேஷகாலங்களிலும் ஸ்திரீகளும் புருஷர்களுடன் சாதாரணமாய்க் கூடி சந்தோஷித்தல், பாலர் பள்ளிக் கூடங்கள், மாணவர் சாஸ்திர ஆராய்ச்சி சபைகள், மாணவர் வித்யாபி விருத்தி சங்கம், உபயோகமான ஞானஅறிவு வித்யா விஷயங்களை நம் நாட்டு மொழிகள் மூலமாய் ஜனங்களுக்குத் தெரிவிக்கும் சமாஜங்கள், பாரசீகச்சீர் திருத்தங்கள், பாலிய விவாகம் நிறுத்தல், ஹிந்துக்களுள் விதவா விவாகம், பார்ஸி சமயாபிவிருத்தி சபை முதலிய பல கலாசாலைகளை விட்டு வேலைகளிலமர்ந்து பல சிறுவர் கூட்டங்களினால் பரிபாலிக்கப்பட்டு வந்தன. இக்கைங்கரியங்கள் சிலவற்றுள் எங்கள் மேலோர் உதவி கிடைத்தது. மற்ற விஷயங்களில்ஸ்ரீ மான்களான சர், எர்ஸ்கின் பெரிபாட்டன் முதலிய துரைகள் அளித்த ஊக்கமும் உற்சாகமும், எடுத்துக் கொண்ட விஷயங்களின் மேன்மையும் சத்தியமும் நியாயமுமே எங்களுக்கு தக்கதுணையாயிருந்தன. இவைகள் தான் எல்பின்ஸ்டன் கலாசாலையில் ஆங்கிலங்கற்றதன் முதல் முதலான சில பிரயோஜனங்கள்.

ஆம், அந்நாட்களை யெல்லாம் இப்பொழுது நினைக்கும் பொழுது எனக்கு உள்ளம் பூரித்து ஒரு விதமான கௌரவமும் வருகின்றது; ஜனங்களுக்கு நான் செய்யக் கட்டுபட்டிருந்த கடமையையும் செலுத்தி விட்டேன் என்ற திருப்தியும் என் மனதில் உறைகின்றது. ஆகா அந்நாட்களே சுதினங்கள்; அவைகளை நான் ஒருக்காலும் மறவேன்: அவைகளே எனக்குக் குறையாது ஆனந்தங் கொடுக்கும் ஊற்றுக்குழிகள்.

என் ஆயுளின் முற்பகுதியில் சம்பவித்தவைகளுள் அதிமேலானது என்னவென்றால் நான் கற்ற பழைய எல்பின்ஸ் கலாசாலையிலேயே "பூதகணித சாஸ்திரி" யாக அழைக்கப்பெற்றதே. இந்தியர்களுக்குள் எல்பின்ஸ்டன் பண்டிதர் என்ற பட்டத்தை முதல் முதலில் பெற்றது நான் தான்.

எனக்கு அப்பட்டப் பெயர் கிடைக்கக் கூடிய பட்டங்களுள் உயரியது, சீரியது, அக்கீர்த்தியே கீர்த்தி. எனக்கு அதுவே உல்லாசக் கொண்டாட்டம், ஆனந்தக் களிப்பு. இன்றைக்கும் பல பிள்ளைகளும் மாணவர்களும் என்னை "தாதாபாய் பண்டிதர்" "பண்டிததாதாபாய்" என்றே அழைக்கிறார்கள்.

பால்யத்தில் நான் விதைத்த விதைகளின் பயனே இன்று எனக்குக் கிடைத்திருக்கும் தேசத்தார்களின் அன்பும் ஆதரவும் மதிப்பும். இவைகள் நல்ல மாதூல் "இந்தியர் திலகன்" "இந்திய தேசத்துக் கீர்த்தி வாய்ந்த வயோதிகர்" என்று ஜனங்கள் வாழ்த்தி அழைப்பதில் நான்சந்தோஷப்படுவது வீண் பெருமையாமோ?.

அப்படியில்லை; நான் அப்பட்டம் பெறத்தகுந்தவனோ அல்லனோ; அது நான்பட்ட சிரமங்களுக்கும் எடுத்த முயற்சி களுக்கும் தகுந்த வெகுமானமே. அதுவே நான் என்சிரமேற் கொள்ளத் தக்கது. அது இந்தியர்களின் உயர்ந்த நினைவையும் விசால மனத்தையும் நன்றி மறத்தல் இன்மையுமே சூசிப்பிக்கின்றன. என் சிநேகர் ஒருவர் நான் இன்னொரு ஜன்மம் மானிடனாய்ப் பிறந்து உயிர்வாழ விரும்புகிறேனா என்று கேட்டார். "நிச்சியமாய் ஆமாம்! வாழ்வின் சோதனைகள் மோசங்கள் எவை இருப்பினும் இன்னும் உயிர்வாழ விரும்புவேன்" என்றேன்.

இத்துடன் என் சரித்திரத்தை நிறுத்தவேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால் என்னைச்சேர்ந்தவர் இன்னும் ஒருவர் இருக்கிறார். அவரைப் பற்றி இங்கே நான் கடைசியாய்க் கூறி

னும் அவர் என் உள்ளத்தில் யாண்டும் முதலிலேயே நிற்கிறார் அவர் தான் என் தாயார். ஏகபுத்திரனாகிய நான் சிறுவயதி லிருக்கும்பொழுதே விதவையான என் அன்னை அவளது இவ்வுல கத்து ஆசையெல்லாம் என்னிடம் நிறுத்தி என்னை நம்பியே முழுதும் அமங்கலியாயிருந்தனள்.

தன் சகோதரர் உதவிகொண்டு தன் குமாரனாகிய எனக் காக எவ்வளவோ சிரமமெடுத்து உழைத்து வந்தாள் அம்மாது ஸ்ரீ.

அவள் கற்றறியாத வளாயினும் என்னிடம் முழுவாஞ்சை யையும் காட்டினபோதிலும் அவள் நல்ல விவேகியாயிருந்தாள். என்னை ஜாக்கிரதையாய் வளர்த்து நன்னடக்கைகளைப்போதித்து தீவழிச் சேராவண்ணம் என்னைப் பாதுகாத்து சீர்படுத்தினள் அந்த "முன்னறி தெய்வம்"

இன்னும் எனது அன்னையார் பக்கத்திலிருப்பவர்களுக்கு வேண்டும்போது தகுந்த யோஜனை பல சொல்லுவாள். நான் எடுத்துக்கொண்ட விஷயங்களாகிய பெண்கல்வி, ஆசாரச்சீர்த் திருத்தங்கள் முதலியவைகளில்அக்காலத்திய அபிப்பிராயங்களை யும் தூரபிமானங்களையும் பக்ஷபாதங்களையும் கவனியாது எனக் காக முழுமனதுடன் சந்தோஷமாய் யுதவி புரிந்தாள் என் மாதா. என்னை இன்று மற்றவர்கள் நினைக்கும் வண்ணம் ஆக்கி யதும் அவ்வம்மணியே. அவளே

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

அத்தாயின் கண்மணி தாதாபாய் நீடூழி வாழ்க!

முற்றிற்று.

வர்த்தமானம்.

முடிசூட்டு மங்கல வாழ்த்து.

அரங்கேற்றப்பட்டது.

நிகழும் 1911ஞ் டிசம்பர்மீ 12உ மங்களவாரதினம், டில்லிமாநகரில்; மகாகனம்பொருந்திய (ஐந்தாவது) லீஜ் லார்ட் ஜார்ஜ் மகாராஜா சக்ரவர்த்தி அவர்களுக்கு நடைபெற்ற மகுடாபிஷேக வைபவத்தை முன்னிட்டு அன்று மாலை 7-மணிமுதல் 8-மணிவரையில், சென்னைக் கோமளேசுவரன் பேட்டை வெங்கடாசல ஆசாரி வீதி 13வது எண்ணுள்ள வேதாந்தப் பிரசங்க சபா மண்டபத்தின் கண், எ:ம்மாற் கூட்டப்பட்ட சபையில்; பிரம்ம ஸ்ரீ சிவாநந்த சாகரயோகீசுவரரவர்கள் மாணுக்கராகிய ம-ா-ா-ஸ்ரீ, பண்டிதர் மா. நமசிவாயம் பிள்ளை யவர்களியற்றிய முடிசூட்டு மங்கலவாழ்த்துச் செய்யுட்கள், ஸ்ரீமான் செந்தமிழ் இரத்திநுகரம் வல்லை சண்முகசுந்தரமுதலியாரவர்களால் அரங்கேற்றப்பட்டது. அப்பொழுது, இந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதரும், லோகோபகாரிப் பத்திராதிபரும் வேதாந்த தர்க்க சாஸ்திரங்களில் மிக்க வல்லவருமாகிய ஸ்ரீமான். கோ-வடிவேலு செட்டியாரவர்கள் சபா நாயகராக வீற்றிருந்தார்கள். அன்றியும் ஸ்ரீமான் கா. கந்தசாமி ஆசாரியாரவர்கள், ஸ்ரீமான். ஆ. மே. சென்னகேசவுலுநாயுடு அவர்கள் முதலிய வித்வான்களும் விஜயஞ் செய்திருந்தனர். அங்கு மகாராஜா அவர்கள் திருவுருவப்படம் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய செய்யுட்கள் புத்தக ரூபமாக அச்சிடப்பட்டுப் பின்னர் வெளிவரும்.

இங்ஙனம்

M. V. சுந்தரேச அய்யர்.

பலிவாயினின்றுப் தப்பினுன்:— ஒரு மெடிகல் ஸ்டூடென்ட் ஐரோப்பியன் ஜோஹோர் காட்டில் ஒரு நதிக் கரையின் மேற் போய்க்கொண்டிருந்தபோது இரண்டு புலிக் குட்டிகள்வெளியிற்

படுத்துக்கொண்டிருக்கக் கண்டனன்; அவற்றுள், நன்றாகவிருந்த ஒரு குட்டியைத் தூக்கிக்கொண்டு போகும்போது தாய்ப்புலி திடீரென்று வந்து அந்தஐரோப்பியன்மேல் பாய்ந்தது. பாய்ந்த வேகத்தால் குறிதப்பிப் புலி ஆற்றில் வீழ்ந்தது. விழுவே, ஐரோப்பியன் குட்டியைத் தூக்கிக்கொண்டு விரைவாகப் பங்களாவிற் கொண்டுபோய்ப் புலிக்குட்டியைக்கூட்டிலடைத்துப்பத்திரப்படுத்தினுன். மறுநாள் காலையில் புலிக்குட்டி யிருந்த விடத்தி லில்லாமையால், தாய்ப்புலி வந்து அக்குட்டியைத் தூக்கிக்கொண்டு போயிருக்க வேண்டுமென்று கருதப்படுகின்றது.

1000-வயதுடைய பத்திரிகை:— சைனுவில் பிரசுரமாகும் "சிங்-பா" என்னும் பத்திரிகை 1000 வருட காலமாக நடைபெற்று வருகின்றதாம். இதன் ஒவ்வொரு பிரதியும் சைனு அரண்மனையில் பத்திரமாகச் சேமித்து வைக்கப்படுகின்றதாம்.

7-வருடம் மறைந்திருந்த ஒரு மோசக்காரன்:— 1904-ம் வருடம் செப்டம்பர்மீ கான்பூரிலிருக்கும் லால் சந்து ஜோடிராம் என்னும் வியாபாரியின் லட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்தை மோசஞ்செய்து மறைந்திருந்த துர்க்கபிரசாத் என்பவன் இப்போது இரங்கோனில் போலிசாரால் பிடிபட்டிருக்கின்றான்.

ஒருவயோதிக நீக்ரோமாது:— புரூக்லினில் 92 வயதுடைய ஆனி மேரியா பிஷர் என்னும் ஒரு நீக்ரோக்கிழவி இறந்துபோயினள். இவள் 1825 வது வருடத்தில் பிரசிடெண்டாயிருந்த ஜான்குவின்சி ஆடம்ஸ் அவர்கட்குச் செக்ரிடெரியாயிருந்த ஹென்றிகிளேயின் அடிமைப் பெண்ணாயிருந்தவள். இவள் புரூக்லினில ஒரே வீட்டில் 60 வருடம் வசித்திருந்தனள். இவளிறக்குங் காலத்தில் இவளிடத்தில் 1400 பவுண்டு இருந்தன. இவற்றுள், பெரும்பாகத்தை நீக்கிரோஜாதியாரின் கல்விக்காகவும், தர்ம கைங்கரியத்திற்காகவும் வைத்திருக்கின்றனள்.

ஒரு பரோகாரி:—மிஸ்டர் ஆன்டிரூகார்ன்கி என்பவருக்கு இப்போது வயது 78. இவர் தனவந்தனுகப்பிறப்பது பாப மென்

னுங் கொள்கையுடையவராதலின், 5,000,000 பவுண்டு இப்போது தர்மத்திற்காக நன் கொடை யளித்திருக்கின்றனர். இவர் இது காறும் 44, 160,000 பவுண்டு தர்மஞ்செய்திருக்கின்றனர். இவற்றுள், புஸ்தகசாலைகள் ஸ்தாபிப்பதற்காகவே 10,500,000 பவுண்டு கொடுத்திருக்கின்றனர். இவரைப்போன்று பரோபகாரி மிஸ்டர் ராக்பெல்லர் என்பவர், இவரும், 34,942,000 பவுண்டு பரோபகாரமாக நன்கொடை யளித்திருக்கின்றனர்.

பத்திரிகை வரவு.
விவேகபோதினி.

இந்த மாதாந்தப்பத்திரிகையின் டிசம்பர்மாதத்தியது வழக்கம்போல எமக்கு அனுப்பபெற்றோம். இதில், தலைவன் வழிபாடு விக்ரகாராதனமும் மிகாயில்களும், ஆத்திச்சூடி விளக்கம் என்றற்றொடக்கத்தனவாய பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. மகாராஜா அவர்கள் சித்திரப்படமும் ராணியவர்களுடையதும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றன.

காலஞ்சென்ற ஆன., பில் மிஸ்டர்
வி-கிருஷ்ணசாமிஐயர்

டிசம்பர் 28ந்தேதி காலை 6-15மணிக்கு ஆனரபில் வி-கிருஷ்ணசாமிஐயர் மைலாப்பூரில் தமது கிருகத்தில் தேக வியோகமாயினர். சுக சரீரிபாகவேயிருந்து திடீரென்று இறந்துவிட்டனர். இவர் டில்லிதர்பாருக்குச்சென்றனர். அங்குகொஞ்சம் சுரமுண்டாகவே திரும்பிச் சென்னைக்கு வந்து இரண்டொரு நாளைக்கெல்லாம் இறந்துவிட்டனர். இவர் இது வரையில் எவரும் அகித்திராத கௌன்சிலர் பதவியை யடைந்து தமிழ் நாடு புகழ வாழ்ந்தனர். இவருக்கு வயது ஐம்பதுக்குமேற்பட்டதென்று தெரிகிறது. இவர் இறந்தது தமிழ் நாட்டுக்குப் பெரிய நஷ்டமேயாம் இவர் மகா தர்மிஷ்டர். இவரைப் பற்றிய சகல விவரமும் அடுத்த பத்திரிகையில் விவரமாக வரைவோம்.